
# தொண்டன்

ஆரம்பம் - பெப்ரவரி 1969



செப்டம்பர் - ஒக்டோபர்

2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்


செப்ட் - ஒக்டோ - 2002

மலர் 34 ❄ இதழ் 06



ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்
மெற்றில்டா இராஜேந்திரம்



வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/மட். மறை மாவட்டம்
முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்.
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS
CENTRE
P. O. BOX - 44
BATTICALOA. 30000
Tel: 065 - 22723

விலை - 12/=
ஆண்டுச்சந்தா : 190/=
ஆறுமாதச் சந்தா 100/=
(தபாற்செலவு உட்பட)




## உள்ளே


அன்புடன் உங்களோடு - 1
மட்டக்களப்பில் நடைபெற்ற.... - 2
பாலையூற்று புனித லூர்து... - 3
வேண்டுகோள் - 4
திருச்சிலுவை மகிமைத் திருநாள் - 5
இலக்கிய மஞ்சரி........ - 7
இணையத்தளங்களின் வளர்ச்சி.... - 8
என் சகாக்களுக்கு..... - 11
உலகத் தொடர்பு தினவிழா - 12
ஓராண்டு நினைவு - 14
கனடாவில் நடைபெற்ற 17வது.. - 15
நினைப்பதெல்லாம் - 18
மட்டக்களப்பில் பக்திச்சபைகள் - 20
ஏழையோடு ஏழையாக - 22


## கிறிஸ்மஸ் - புத்தாண்டுச் சிறப்பிதழ்

எதிர்வரும் டிசம்பர் - ஜனவரி மாதங்கள் இணைந்து கிறிஸ்மஸ் - புத்தாண்டுச் சிறப்பிதழாகத் தொண்டன் வெளிவரும் சிறப்பிதழைச் சிறப்பிக்க பொருத்தமான ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம்.

***அனுப்பவேண்டிய இறுதிநாள் ஒக்டோபர் 31.***

ஆசிரியர் - தொண்டன்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு

எப்போது நடக்குமோ
எங்கு நடக்குமோ - என
எல்லாராலும் எதிர்பார்க்கப்பட்ட
சமாதானப் பேச்சுவார்த்தை
தாய்லாந்தில் சட்டாஹிப் நகரில் - பல
ஆரவாரத்தின் மத்தியில்
அரங்கேறிவிட்டது.

எல்லோர் மனதிலும் - ஓர்
நிம்மதிப் பெருமூச்சு
முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை
வெற்றியாக முடிந்துவிட்டதே காரணம்.
முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை - அது
ஆரம்பம் தானே தவிர
அதுதான் இறுதி முடிவல்ல என்பதும்
நமக்குத் தெரியாததல்ல.

எத்தனையோ தீர்வுத் திட்டங்களும்,
பேச்சு வார்த்தைகளும்
காலத்துக்குக் காலம்
நடை பெற்றாலும் - அவையெல்லாம்
காற்றோடு கலந்துவிட்ட நிலையில் - இப்
பேச்சுவார்த்தை - எம் மத்தியில்
ஓர் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

தாய்லாந்தில்-
பேச்சுவார்த்தைகள்
நடைபெற்ற - அதே வேளையில்
சகல சமயங்களும் பிரார்த்தனையில் ஈடுபட்டது
யாவரும் அறிந்த ஒன்றே.
முரண்பாடுகளைத் தீர்க்க முடியாமல்
பிரச்சினைக்குரியோர் முரண்பட்டபோது,
புரிந்துர்ணர்வுகளை ஏற்படுத்த முடியாமல்
பிரச்சினைக்குரியோர் பிரிந்து நின்றபோது
இறை சக்தியே - இனப்பிரச்சினையை
தீர்க்கும் என்ற நம்பிக்கையில்
மடு அன்னையின் திருச் சொருபத்தை
அனேக மறை மாவட்டங்களுக்கும்
எடுத்துச் சென்று - மக்கள்
பக்தியோடு உருக்கமாக செபித்ததையும்
இவ் வேளை நினைவு கூர வேண்டும்

அதே போன்று - இன்றைய
காலகட்டத்தில்
அனைத்துச் சமயங்களும்
சமாதானத்தை எதிர்நோக்கி
பிரார்த்தனையில் ஈடுபட்ட நிகழ்ச்சி
இலங்கையில் தெய்வ பக்தி - இன்னும்
சாகவில்லையென்பதைப் புலப்படுத்துகிறது.

அழிவுகளிலிருந்தும், தீமைகளிலிருந்தும்
மனிதன் மாற வேண்டும்.
சில, சில மனிதர்களின்
சில, சில தீமைகள் தான்
நம் நாட்டை
இரத்தக் களரியாக்கியது; மயானமாக்கியது.
தீமை செய்ய நினைக்கும்
மனிதரின் இதயத்தில்
தெய்வ பக்தி என்ற ஒன்று இருந்தால்
நாட்டிற்கு சமாதானமும், சுபீட்சமும்
வராமலா போய் விடும்! - எனவே
தொடர்ந்தும் செபிப்போம்.




## இறைவாக்கு



உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க !
அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்
களைக்கண்டு உங்கள் விண்ணகத்
தந்தையைப் போற்றி புகழ்வார்கள்.

மத் 5/16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் நடைபெற்ற உலகத் தொடர்புதின விழா

திருகோணமலை- மட்டக்களப்பு மறை மாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் நடாத்திய உலகத் தொடர்பு தின விழா கடந்த ஆகஸ்ட் மாதம் 22ம் திகதி மாலை 4.30 மணி அளவில் மட்டக்களப்பு சாள்ஸ் மண்ட பத்தில் நடை பெற்றது. பிரதம அதிதியாகக் கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மூக்கையா அவர்களும் சிறப்பு அதிதியாக அருள்தந்தை போல் சற்குணநாயகம் யே.ச. அவர்களும் சிறப்புப் பேச்சாளராக பேராசிரியை கலாநிதி சித்திரலேகா மௌனகுரு அவர்களும் கலந்து கொண்டனர். பிரதம விருந்தினர்கள் மங்கள வாத்தியங்கள் முழங்க, மாலைசூட்டி, ஆராத்தி எடுத்து வரவேற்கப்பட்டனர். சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் தலைவர் அருட்தந்தை J.A.G இரட்ணகுமார் அவர்கள் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தர் அங்கு உரையாற்றுகையில்: "கடந்த நூற்றாண்டில் மத்திய பகுதியில் இருந்து மனித வாழ்விலே தொடர்பு சாதனங்களின் செல்வாக்கு அதிக அளவிலே வளர்ந்திருக்கிறது என்பதை நமது வாழ்க்கை அனுபவங்களில் இருந்து அறிந்திருக்கிறோம். செய்திகளும், பொருட்களும், மக்களும் எடுத்துச் செல்லப்படுவதற்கு தொடர்புசாதனங்கள் உதவுகின்றன. கருத்துக்களையும் செய்திகளையும் தொடர்பு சாதனங்கள் பரிமாற்றம் செய்ய உதவுகின்றன.

வாழ்க்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற வகையில் இன்று வளர்ச்சியடைந்துள்ளன. மனித நாகரீக வளர்ச்சியே இன்று தகவல் பரிமாற்றத்திலே தங்கி நிற்கின்றது. இதனைத் தகவல் தொழில்நுட்ப சகாப்தம் என்று சொல்கிறார்கள். ஊடகங்கள் நவீன வாழ்க்கைக்கு மிக மிக அத்தியாவசியமானவை. இல்லா விட்டால் நாங்கள் இந்த வளர்ச்சி நிலையை அடைந்திருக்க முடியாது. அதனை ஒருசாரார் தமது சுயநலனுக்காக, தமது நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்தும் போது அதனால் மற்றவர்கள் பாதிப்படைவது கவலைக்குரிய விடயம். ஆகவே இவைகளைக் கட்டுப்படுத்தி தகவல் ஊடகங்களின் கைப்பொம்மையாக நாங்கள் மாறிவிடாது, அவற்றை நாம் பயன்படுத்துகின்ற ஒரு சமூகமாக வளர வேண்டும்." இவ்வாறு குறிப்பிட்டார் பேராசிரியர் எம். எஸ் மூக்கையா அவர்கள்.

இவ்விழாவில் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்ட கிழக்குப்பல்கலைக் கழகப் பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு அவர்கள் 'மானுட மேம்பாட்டில் தொடர்பு சாதனங்கள்' என்னும் தலைப்பில்



உரையாற்றினார். "இணையம்" என்பதை அடிப்படையாகக் கொண்டு ஆற்றிய அவரது உரையின் முக்கிய பகுதிகள் பிறிதொரு பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

உலகத் தொடர்பு தின விழாவையொட்டி மறை மாவட்ட ஏடான தொண்டன் சஞ்சிகை மட்டக்களப்பு மாவட்டச் சிறப்பிதழாக வெளியிட்டு வைக்கப்பட்டது. இது தொடர்பான அறிமுக உரையை கிழக்குப்பல்கலைக்கழக உதவி நூலகர் திரு. தீசன் ஜெயராஜ் அவர்கள் வழங்கினார். தொண்டன் சிறந்த விற்பனையாளருக்கான விருது உட்பட, போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கான பரிசுகளும் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொழும்பைச்சேர்ந்த திரு. அம்பு றோஸ் பீற்றர் அவர்களின் தயாரிப்பான - திருவிவிலியத்தில் உள்ள திருப்பாக்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட திருப்பாடல்கள் இசை நாடாக்களின் 4ம், 5ம், 6ம் பாகங்கள் அன்றைய விழாவின் சிறப்பு நிகழ்வாக வெளியிட்டு வைக்கப்பட்டன. அத்துடன் இவ்வாண்டுக்கான தொடர்பு சாதன விருது, மேடை, வானொலி நாடகக் கலைஞரும் ஓய்வு பெற்ற ஆசிரியையுமான திருமதி. புவனேஸ்வரி அகஸ்டின் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இடையிடையே விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி விரிவுரையாளர் செல்வி. ஷர்மிலா கொரேரா அவர்களது மாணவியரின் நடனங்களும் இடம் பெற்றன. இறுதியாக நன்றியுரையை திரு. செல்லத்துரை ஜெயராஜா அவர்கள் கூற உலகத் தொடர்புதின விழா நிகழ்வுகளை திரு. ஜூலியானா சில்வெஸ்டர் தொகுத்தளித்தார்.

# பாலையூற்று புனித லூர்து அன்னையின் திருத்தல பீடப்பணியாளர்கள் சபை திருவிழா 2002 ஜூலை 07

திருகோணமலை - பாலையூற்று புனித லூர்து அன்னை ஆலயப்பங்கு பீடப்பணி யாளர் சபையினர் தமது பாதுகாவலரான புனித ஞானப்பிரகாசியார் (St. Aloycious) திருநாளை கடந்த 07-07-02 அன்று கொண்டாடினர். பாலையூற்று புனித லூர்து அன்னை ஆலயத்தில் சிறப்புத்திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

பீடப்பணியாளர்கள் திருப்பலியில் குருவானவருக்கு அடுத்தவர்களாகக் கருதப்படுகின்றனர். எனவே அந்த வகையில் எமது பங்கில் பீடப் பணியாளர் சபையினர் சிறப்பாக இயங்கி வருவது பெருமைக்குரிய விடயமாகும். இந்தப் பெருமைக்குக் காரண கர்த்தாக்களாக இருப்பவர்கள் பாலையூற்றுப் பங்குத் தந்தை அருட்பணி ஜீவனதாஸ் பெர்னான்டோ அ.ம.தி. மற்றும் பாலையூற்று முன்னால் உதவிப்பங்குத்தந்தை அருட்பணி யூஜின் பெனடிக் அ.ம.தி. இவர் முன்னாள் பாலையூற்று பீடப்பணியாளர் சபையின் போசகர் என்பது குறிப்பிட வேண்டிய விடயமாகும். மற்றும் தற்போதைய போசகர் அருட்சகோதரர் றொவின்சன், மற்றும் எமது பங்கில் பணியாற்றிவரும் திருக்குடும்பக் கன்னியர் சபை அருட்சகோதரிகள் சிறப்பாக அருட்சகோதரி பெல்சியா, மற்றும் எப்போதும் ஆலயத்திற்கென்றே தம்மை அர்ப்பணிக்கும் அம்மாமார்கள் மற்றும் ஏனைய பக்திச் சபைகள் என்பவைகளே எமது பங்கில் பீடப் பணியாளர் சபை சிறப்பாக வளர்ந்து வரக் காரணமாக உள்ளனர்.

இவ்வருடம் எமது பங்குப் பீடப்பணியாளர்களுக்கு தமது பாதுகாவலரான புனி ஞானப்பிரகாசியார் திருநாளை முன்னிட்டு பீடப்பணியாளர்களுக்கான எழுத்துப்பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டு புள்ளிகள் அடிப்படையில் பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்தப் போட்டிப்பரீட்சை கடந்த 29-06-02 அன்று நடாத்தப்பட்டது. பின் திருநாள் சிறப்புத்திருப்பலி கடந்த 07.07.02 அன்று காலை 6.00 மணி திருப்பலியில் சிறப்பிக்கப்பட்டது. திருப்பலி வழிபாடுகள்யாவும் எமது பங்குப் பீடப்பணியாளர்களும் இணைப்பங்கான அன்புவழிபுரம் பங்கு பீடப்பணியாளர்களும் இணைந்தே செய்தனர். திருநாள் திருப்பலி முடிந்ததும் ஆலய முன்றலில் கொடி ஏற்றப்பட்டது. அதாவது பங்குக் கொடியை பங்குத்தந்தையும், புனிதஞானப்பிரகாசியார் பீடப்பணியாளர் சபை (S.A.A.S.) கொடியை சபையின் தலைவர் செல்வன் யு. கிமல் ஏற்றி வைக்க அனைத்து பீடப்பணியாளர்களும் தங்கள் வலது கைகளைக் தமது தோள் மட்டத்திற்கு உயர்த்தி பீடப்பூக்களின் பத்துக் கட்டளைகளைப் புதுப்பித்தனர்.



(தொடர்ச்சி 21ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டுகோள்

எம். எல். எம். அன்வர்

என்னதான் முடிவு காணும்
எந்தவோர் தீர்வு தோன்றும்?
கொன்றொழிக் கின்ற யுத்தம்
குறைந்துமே வழியைக் காணோம்!
வென்றவர் யாருண் டாமோ
வெந்தணல் இனவா தத்தால்?
இன்னுமே அழிவு நாட்டில்
ஏற்படின் தாங்கா தையா!

பிறந்தகம் தன்னில் உரிமை
பெற்றுநாம் வாழ்தல் தவறா?
நிரந்தரம் இல்லா வாழ்வு
நிர்க்கதி யாகிப் போச்சு!
மறந்திட முடியாத் தொல்லை
மாறிடா அவலம் கொள்ளை!
இறந்துதான் வாழு கின்றோம்
இந்நிலை மாறு மாமோ?

போரிலே இன்பங் காணும்
போக்கிரிக் கூட்டம் இன்னும்
ஊரிலே உலவு தையா,
உருப்படு மாயிந் நாடு?
வீரிய ஆர்ப்பாட்டங்கள்
விளைச்சலாய் இனவா தந்தான்!
கூரிய கத்தி யென்று
குத்துதே சமாதா னத்தை

சோசலி சக்கா ரர்கள்
சொல்கிற கொள்கை வேசம்!
நாசமாய்ப் போவோர் வெற்றி
நாடவே நாட கங்கள்!
ஈசனே கொலைகா ரர்கள்
இங்கெழல் வேண்டாம்! தீய
வேசதா ரர்கள் அழிந்து
விருத்திகொள்ளமைதி ஈவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச் சிலுவை மகிமைத் திருநாள்

## புரட்டாதி மாதம் 14ம் நாள்

இற்றைக்கு 2000ம் ஆண்டுகளுக்கு முன்னர் ரோம் இராச்சியத்தின் யூதேயா நாட்டில் சிலுவை ஓர் அவமானத்தின் சின்னமாக இருந்தது. யூதமார்க்க சட்டப்படி கொலைக் குற்றவாளியை சிலு வையில் அறைந்து கொன்றனர். ஏன் சிலுவையில் அறைந்து கொல்ல வேண்டும்? குற்றவாளி தான் செய்த குற்றங்களுக்காக சிலுவையில் தொங்கி அவனது உடலுறுப்புக்கள் ஒவ்வொன்றும் அணு வணுவாக மரணவேதனை அனுபவித்து உயிர் பிரிய வேண்டும் என்பதற்காகவே.

எமது பரமபிதா தம் மக்கள் கட்டிக்கொண்ட பாவங்களுக்காக அவர்கள் மீது மனமிரங்கி அவர்களின் மீட்புக்காக இறைமகன் இயேசுவை உலகிற்கு அனுப்பினார். அவர் மனிதனாக யூதேயாவில் பிறந்து, முப்பது வயது வரை தமது தாய் தந்தையர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்து, முப்பத்து முன்றாம் ஆண்டு வரை யூதேயா நாடெங்கும் சுற்றித் திரிந்து, சுகிர்த போதனைகளைப் போதித்து, யூதர்களால் பிடிக் கப்பட்டு, கொலைக் குற்றவாளியாகச் சிலுவை யில் அறைந்து கொல்லப்பட்டு, கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டு, மரித்து முன்றாம் நாள் சாவை வென்று உயிர்த் தெழுந்து, வெற்றிக் கொடி யுடன் கல்லறையை விட்டு வெளியேறி, சில நாள் உலகில் தங்கி, பின் னர் மீண்டும் பரலோ கத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவார் என்று வாக்குப் பண்ணி இருந்தார். மக்கள், மீட்பர் எப்போது வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். காலம் வந்தது. 2000 ஆண்டுகளுக்கு முன்னர் யூதேயாவில், யெருசலேமில் பாஸ்கா விழா வெள்ளியன்று அனைத் தும் நிறை வேறியது. இறைமகன் சாவை வென்று உயிர்த்த அன்றே அவமானச் சின்னமாகக் கருதப்பட்ட சிலுவை வெற்றியின் சின்னமாகக் கொண்டாடப்பட லாயிற்று.

இயேசுவின் விரோதிகள் அவர் தொங்கிய சிலுவையை அவருடைய சீடர்கள் கண்டு பிடியாத படி கல்வாரியில் ஒரு பள்ளத்தாக்கில் போட்டு கற்களாலும் மண்ணாலும் மூடிவிட்டனர். கி.பி. 312ம் ஆண்டில் மகா கொன்ஸ்தந்தின் சக்கரவர்த்தி ரோமைச் சிம்மாசனத்தைக் கைப்பற்றுவதற்காக மாக்கன்ஸியூன் என்பவரோடு போராடிக் கொண்டிருக்கும் போது, தமக்கு வெற்றி கிட்ட வேண்டும் என்று கிறிஸ்தவக் கடவுளை வேண்டிக் கொண்ட போது, வானத்தில் ஒரு சிலுவை தோன்றி அச் சிலுவையின் கீழ் இவ் அடையாளத்தினால் நீ வெற்றி பெறுவாய் என்னும் வாக்கியங்கள் எழுதப்பட்டிருப்பதைக் கண்டார். உடனே அரசன் தமது கொடிகளில் சிலுவை அடையாளங்களை இட்டுக் கொண்டு போர்க்களம் சென்றார். சிலுவைக் கொடிகள் தாங்கிய படைகளைக் கண்டதும் எதிரிகள் பின் வாங்கினர். அதிசயிக்கத்தக்க முறையில் அரசர் வெற்றி பெற்று, ரோமைச் சிம்மாசனத்தைக் கைப்பற்றினார். இதன் பின்னர் அரசர் ரோமாபுரியெங்கும் சிலுவைக் கொடிகளைப் பறக்கவிட்டதுடன் தமது படை வீரர், படைக்கலங்களில் எல்லாம் சிலுவைச் சின்னத்தை பொறிக்குமாறு கட்டளையிட்டார். இவை நடந்து பத்து ஆண்டுகளின் பின்னர் கி.பி 322ல் அரசரின் தாயாரான எலேனம்மாள் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியினால் கல்வாரியில் அகழ்வாராய்ச்சி நடைபெற்றது. அவ்வாராய்ச்சியின் போது ஒரு பள்ளத்தாக்கில் சிலுவை யொன்று கண்டெடுக்கப்பட்டது. இது ஒரு வைகாசி மாதம் 14ம் நாளாகும். சில நாட்களின் பின்னர் இன்னுமோரிடத்தில் இரு சிலுவைகள் கண்டெடுக்கப்பட்டதாம். சிலுவைகள் முன்றும் பாதுகாப்பாக வைக்கப்பட்டதாம். இயேசு தொங்கிய சிலுவையின் இரு பக்கங்களிலும் இரு சிலுவைகளில் இரு கள்வர்கள் தொங்கவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. சில ஆண்டுகள் கழித்து அரசரின் தாயார் சுகவீனம் உற்று படுக்கையில் கிடந்தார். வைத்தியர்களாலும் கைவிடப்பட்டார். அப்போது பாதுகாப்பாக வைத்திருந்த சிலுவைகள் மூன்றினையும் எடுத்து இரு சிலுவைகளை அவரின் உடலில் படும்படி வைத்தபோது மாற்றம் எதுவும் காணப்படவில்லை. மூன்றாவது சிலுவையை வைத்தபோது அதிசயிக்கத்தக்கதாக அரசியார் சுகமடைந்து எழுந்து சிலுவையைக் கட்டித்தழுவி முத்தமிட்டார். இவ்வதிசயத்தைக் கண்ட மக்கள் இதுவே இயேசு நாதர் அறையுண்ட சிலுவையென மகிழ்ச்சியாரவாரம் செய்தனர். சிலுவை கண்டெடுக்கப்பட்ட நாளான வைகாசி மாதம் 14ம் திகதி திருச்சிலுவை கண்டெடுக்கப்பட்ட திருநாளாகத் திருச்சபை கொண்டாடி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிலுவை கண்டெடுக்கப்பட்டு 292 ஆண்டுகளின் பின்னர் கி.பி 614ம் ஆண்டில் பாரசீக மன்னன் 2ம் கோஸ்ற்றஸ் என்பவன் சிரியா, பலஸ்தின நாடுகளின் மீது படையெடுத்து வெற்றிபெற்று, அந் நாடுகளில் இருந்த விலையேறப் பெற்ற பொருட் களுடன் திருச்சிலுவையையும் எடுத்துச் சென்றுள் ளான். கொன்ஸ்தாந்தின் நகரப் பேரரசனான எராக் கிளியூஸ் என்பவர் பெரிய இராணுவத்துடன் பார சீகத்தின் மீது படையெடுத்துச் சென்று சமாதானம் செய்து கொள்ளுமாறும் திருச்சிலுவையைத் திருப்பிக் கொடுக்குமாறும் மக்களை வற்புறுத்தினார். யுத்தம் சமாதனமாக முடிந்தது. பாரசிக மன்னன் தான் கொள் ளையடித்த பொருட்களையும் திருச்சிலுவையையும் அரசரிடம் திருப்பிக் கொடுத்தார். எராக்கிளியூஸ் அரசர் அரச உடையில் விலையேறப் பெற்ற கற்கள் பதித்து பக்தியுடன் 629ல் திருச்சிலுவையைத் தமது தோளிலே சுமந்து கொண்டு யெருசலேமுக்குச் சென்றார். அங் கிருந்து கல்வாரியில் ஏற முயன்றபோது அரசரால் ஏற முடியாமல் போயிற்று. எவ்வளவு முயன்றும் முடிய வில்லை. அரசர் என்ன செய்வது என்று திகைத்து நின்று கொண்டிருக்கையில் யெருசலேமில் ஆயராய் இருந்த சக்கரியாஸ் ஆயர் அவர்கள் அவ்விடம் வந்து " பேரரசரே இயேசு நாதர் சிலுவையைச் சுமந்து செல்லும் போது இவ்வித ஆடை ஆபரணங்களைத் தரித்திருக்க வில்லையே" என்றார். உடனே அரசர் தாமணிந்திருந்த ஆடை ஆபரணங்களைக்களைந்து, தவ உடை தரித்து, கல்வாரியில் மிக இலகுவாக ஏறி இயேசுவை அடக்கம் செய்த திருக் கல்லறையிலே திருச்சிலுவையை வைத்தார். அந்த நாள் புரட்டாதி மாதம் 14ம் திகதியாகும். இவ் விழாவையே திருச்சபை உலகமெங்கும் திருச்சிலுவை மகிமைத் திருநாளாகக் கொண்டாடி வருகின்றது. இந் நாளை திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாள் என்றும் கூறுகின்றார்கள்.

இலங்கையில் கிழக்கில் உள்ள திருமலை மட்டு நகர் மறைமாவட்டத்தில் மட்டக்களப்புக்குத் தெற்கே 39 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கல்முனை மறைக்கோட்டத்தில், மட்டக்களப்பு வாவியின் தென் அந்தத்தில், வாவியின் மேற்குக் கரையில், சொறிக்கல் முனைக் கிராமம் உள்ளது. இக் கிராமம் போக்கு வரவு, குடி நீர் பிரச்சனை இவ்வை போன்ற அசௌகரியங்கள் உள்ள கிராமமாகும். இக்கிராமத்தில் திருச்சிலுவை தேவாலயம் ஒன்றுள்ளது. இக்கிராமத்தில் நூறு வீதம் கத்தோலிக்க மக்கள் வாழ்ந்துள்ளனர். இங்குள்ள இவ் வாலயம் ஏறக்குறைய 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த தென ஆய்வுகள் முலம் அறியக் கூடியதாய் இருக்கிறது. ஆனால் எப்போது இவ்வாலயம் யாரால் அமைக் கப்பட்ட தென்பதற்குரிய சான்றுகள் எதுவும் கிடைக்க வில்லை. இவ்வாலயம் அப்போது சாந்த குருஸ் ஆலயம் என்றழைக்கப்பட்டுள்ளது. இவ் வாலயத்தை மட்டக் களப்புத் தென்பகுதியில் முதலியாராய் இருந்த பஸ் கோல் முதலியார் கிராமத்தில் கிடைக்கும் சொறிக்கல் என்றழைக்கப்படும் ஒருவகைக் கல்லினால் இத்தாலிய நாகரீகப் படி அழகிய முகப்புடையதாக 1808ம் ஆண்டு கட்டி யெழுப்பி, கோயிலைச் சுற்றவர அதே கல்லினால் மதிலும் அமைத்துள்ளார். அமலமரித் தியாகிகள் சபைக் குருமார் 1850ல் ஆலயத்தின் இரு புறமும் விறாந்தை கள் அமைத்து ஆலயத்தைப் பெரிதாக்கி, முற்பகுதியில் ஆலயத்துடன் சேர்த்து ஆரம்பப் பாடசாலை ஒன்றினை யும் அமைத்துள்ளனர். ஆலயத்தில் கோவைப் பேராய ரினால் சொறிக்கல்முனைத் திருச்சிலுவை ஆலயத்திற்கு இயேசு நாதர் தொங்கிய திருச்சிலுவையின் பரிசுத்த மாகிய சிறு துண்டொன்று யாழ் ஆயர் வந். வெற்றக் கினி ஆயரிடம் வழங்கப்பட்டிருந்தது. 1906ம் ஆண்டில் திருமலை மறைமாவட்டத்தின் முதல் ஆயரான மொன் சிஞ்ஞோர் லவிங் S.J ஆயரவர்களால் பொன் முலாம் பூசப்பட்ட சிமிள் ஒன்றினுள் இதை வைத்துப் பிரதிஷ்டை செய்து, ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. இது இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. தவிரவும் பாஸ் காவிழா வில் சிலுவையில் அறையப்படும் பரிசுத்த திருக்கல் லறை ஒன்று ஏறக்குறைய 200ஆண்டுகளுக்கு முன்னர் மட்டக்களப்பிலிருந்து வாவி மூலம் கொண்டுவரப்பட்டு ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. மக்கள் இதில் பக்தி யும் நம்பிக்கையும் உடையவர்கள் என்பதை ஆலயத் தின் வருடாந்த உற்சவத்திற்கும் பாஸ்காவிழா விற்கும் வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை மூலம் அறிந்து கொள்ளளாம். 1983ம் ஆண்டு பழைய ஆல யம் இடிக்கப்பட்டு அன்றைய பங்குத் தந்தையரான அருள்தந்தை எல்மோ அடிகளார் மறைந்த அருள் தந்தை சந்திரா பெர்ணான்டோ அவர்களின் அனுசரனை யுடன் சிலுவை வடிவினைக் கொண்ட புதிய திருச் சிலுவை ஆலயம் அமைக்கப்பட்டு இன்றைய ஆயர் கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்ப் பிள்ளை காலத்தில் ஓய்வு பெற்ற ஆயர் வந்தனைக் குரிய L.R அன்ரனி ஆயரவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தவிரவும் ஜுபிலி ஆண்டின் யாத்திரைத் தலங்களில் ஒன்றாகவும் கத்தோலிக்க உயர்பீடம் அனுமதித்துள்ளமையும் குறிப் பிடத்தக்கது. இன்றும் வெள்ளிக்கிழமை தோறும் வெளி யிடங்களில் இருந்து பக்தர்கள் காலையிலும் மாலை யிலும் வந்து செல்வது பரிசுத்த திருச்சிலுவையினதும் கல்லறைச் சொரூபத்தினதும் பக்தி நம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாண்டும் புரட்டாதி மாதம் இத் திருநாளை சொறிக்கல்முனைத் திருச்சபை சிறப் பாகக் கொண்டாட இருக்கின்றது.

**வாழ்க திருச் சிலுவை!**
**வளர்க சொறிக்கல்முனைத் திருச்சபை.**

❑ **எஸ். யோசப் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையொன்று நடாத்துவதின் கஷ்ட நஷ்டங்கள் சம்பந்தப்பட்டவர்கட்கு மட்டுமே புரியும். கையெழுத்துப்பிரதியில் இருந்து அச்சுப்பிரதியாக்கி, பத்திரிகை வடிவமாக்கி, முகவர்களிடம் சென்று அது விற்பனையாகும் வரை எவ்வளவோ பிரச்சனைகள், குறிப்பாகப் பொருளாதாரப் பிரச்சினைகள். இவைதவிர நினைக்கவியலா வடிவங்களிலும் சில பிரச்சினைகள் தலை தூக்குகின்றன.

# 'முத்துமாலை' ஆசிரியரின் கஷ்டங்கள்

## இலக்கிய மஞ்சரி

-ஆழியோன்-

மூதறிஞர் ராஜாஜி அவர்களின் கட்டுரைத் தொகுப்பொன்றை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதன் நான்காம் பதிப்பு 1955லும் ஐந்தாம் பதிப்பு 1971லும் வெளியிடப்பட்டுள்ளன. அதில் முத்துமாலை ஆசிரியரின் கஷ்டங்கள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. அதனை அப்படியே தருகின்றேன்; வாசித்துப்பாருங்கள்.

**"முத்துமாலை" ஆசிரியரின் கஷ்டங்கள்**

"பரம்பதத்திற்கு செல்லும்பாதை மிக்க கஷ்டமான பாதை. தீட்டிய கத்திமுனைமேல் செல்வது போல் அதைக் கொள்க" என்றான் எமன், கடோபநிஷத்தில். அவ்வாறே பத்திரிகை ஆசிரியர்கள் தொழிலும், கத்திமுனைப் பாதையாகவே இருக்கின்றது.

சர்க்கார் சமாச்சாரம் வேண்டாம், அரசியல் விஷயம் வேண்டாம், ஹரிஜனங்களை கிறிஸ்தவர்கள் ஆக்குவது கூட எக்கேடாக ஆவது போகட்டும். கதைகள் பிரசுரித்துப் பத்திகையை நடத்தலாம் என்று முத்து மாலையை ஆரம்பித்தேன்.

சென்ற மாதத்திய இதழில் பங்காரு நாயுடுவின் ஆங்காரம்" என்று "தும்பி" எழுதிய சிறுகதையை எல்லாரும் பாராட்டினார்கள். எங்கள் பத்திரிகைக்கு நல்ல காலம் வந்தது என்றிருந்தேன். அதில், குஜிலிக் கதையில் பங்காரு நாயுடுவை ஒரு பெண் ஏமாற்றிய ஹாஸ்ய விஷயத்தைக் குறித்துத்தான் ஒரு மீசைக்காரர் ஆபீசுக்கு வந்து ஆட்சேபித்தார். "நாயுடுக்கள் எல்லாம் இப்படிப்பட்ட மூடர்கள் என்று எழுதி விடலாமா?" என்றார் பெரியவர்.

"ஒருநாளும் கிடையாது, யாரோ ஒருவர் ஏமாற்றப் பட்டதாகக் கதை. அது ஒருசாதியைக் குறிக்காது. அகஸ்மாத்தாக நாயுடுவாக அமைந்தது. அவ்வளவுதான்" என்றேன்.

"இனி இவ்வாறு செய்யக்கூடாது. இதற்கு ஏதாவது மன்னிப்பு எழுதுவது நலம்" என்று கடைசி வார்த்தையாகச் சொல்லிவிட்டுப் போனார்.

அடுத்த இதழில் ஒரு கதை. மது விலக்கு விஷயம்! குடியால் கெட்ட குப்பாசாரி" என்பது கதையின் பெயர்.

அகில இந்திய விசுவ கர்ம குலச் சங்கத்தின் காரியதரிசி என்று "விஸிடிங்கார்டு" ஒன்று பையன் கொண்டு வந்தான், "வரலாம்" என்று நாற்காலியைக் காட்டி மரியாதை செய்தேன்.

"எங்கள் சமூகத்திற்கு பெருந்தீங்கு
இழைத்து விட்டது உங்கள் பத்திரிகை" என்றார்.
என்ன சமாதானம் சொல்லியும் பயனில்லை.

அடுத்த நாள் என் நண்பர் (பெயர் சொல்லக் கூடாது) ஒரு முஸ்லிம் சகோதரர் வந்தார். கண்கள் சிவந்து முகம் கோணி, பெரும் கோபக்குறிகள் காணப்பட்டன.

முஸ்லிம்கள் வியாபாரத்தில் மோசம் செய்வார்கள் என்று பொருள்பட அந்தக்கதை பிரசுரித்தது தருமமா? என்றார்.

"முத்துசாமியின் மோசம்" என்று ஒருகதை. அது ஒரு பழைய ருஷ்யக்கதை. பெயர்கள் எல்லாம் மாற்றி ஏதோ ஒரு மாதிரியாகத் "தமுதமி" எழுதி முடித்துத் தந்தது.

முதனூலில் ஒரு யூதவர்த்தகன். அவன் பெயர் ஸாகேரியன். இதை எங்கள் "தமுதமி" பகீருத்தீன் என்று வைத்து கதையையும் கொஞ்சம் மாற்றி எழுதியிருந்தார்.

மற்றொரு கதையில் எங்கேயோ! வெங்கட சாமி பிள்ளை இடறிவிழுந்தார் என்றிருந்தது.

யாதவ குலத்தார்கள் எல்லாம் நொண்டிகளா? இது பெரிய அபவாதம் என்று என் நண்பர் பொன்னுகிருஷ்ணபிள்ளை பலமாக ஆட்சேபனை செய்தார்.

நம்மவர்களுடைய சாதிப்பிரிவினைகள் அரசியல் சுதந்திரத்திற்கு மட்டும் தடையல்ல: கதை கட்டுரைகளில் தாராளமாகக் கற்பனை செய்து எழுதவுங் கூட தடைகளாய் நிற்கின்றன.

சிரித்து வாழ நாம் எங்கே போய்க் கற்றுக் கொள்கிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தளங்களின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான காரணம் உலகளாவிய வர்த்தகம்

○ கலாநிதி. சித்ரலேகா மௌனகுரு



கடந்த ஆகஸ்ட் மாதம் 22ம் திகதி மட்/சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற உலகத் தொடர்பு தின விழாவில் "மானுட மேம்பாட்டில் தொடர்பு சாதனங்கள்" என்னும் தலைப்பில் இணையத்தை அடிப்படையாக வைத்து பேராசிரியை கலாநிதி சித்ரலேகா மௌனகுரு அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு.

தொடர்புசாதனங்கள் எம்மை ஆளவிடாது நாம் அவற்றை ஆளவேண்டுமானால் நாம் செய்ய வேண்டியது என்ன, என்ற வினாவைக் கொண்டு சில கருத்துக்களை உங்கள் முன்வைக்கலாமென்று நினைக்கின்றேன்.

தொடர்பு சாதனங்களை இரண்டாகப் பிரிக்கலாம்; ஒன்று அச்சு ஊடகங்கள், அடுத்தது மின்னியல் ஊடகங்கள். இந்தத் தொடர்பு சாதனங்கள் இன்று உலகமெங்கும் குறிப்பாக மின்சாரம் எட்டக் கூடிய இடங்களிலெல்லாம் தமது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றன. எனது உரையில் குறிப்பாக இணையம் என்பதை அடிப்படையாக வைத்து சில கருத்துக்களைக் கூறலாமென்று நினைக்கின்றேன்.

மின்னியல் தொடர்பு சாதனங்களில் முக்கியமான ஒரு விடயமாக இணையம் (இன்ரநெற்) என்னும் தொழில் நுட்பம் இன்று வளர்ந்துள்ளது. இன்றைய காலகட்டத்தை கணனி யுகம் என்றும் தகவல் தொடர்பாடல்களின் யுகம் என்றும் கூறுவார்கள். முதலில் இணையத்தளம் என்றால் என்ன என்பதைச் சுருக்கமாகக் கூறலாம் என்று எண்ணுகிறேன். கணனித் தொழில் நுட்பத்தின் முக்கியமான நவீன வளர்ச்சியாக இணையம் உருவாகியுள்ளது. இவ்விணையத்தின் மூலம் பல்வேறு வகையான வலைப் பின்னல்களை ஏற்படுத்தி, இணையத் தளங்களை ஏற்படுத்தி அவற்றுடன் தொடர்பாடுகின்ற, தொடர்பு கொள்ளுகின்ற ஒரு முறையைத் தான் நாம் இன்ரநெற் அல்லது இணையம் என்று கூறுகிறோம்.

இந்த இணையத்தை இன்று பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்துகிறார்கள். கடிதங்களைப் பரிமாற, தனிநபர்களுக்கிடையே தொடர் பாடலை அதிகரிக்க, கல்விக்காக, தகவல்களைச் சேகரிக்க, தகவல்களை பரிமாற்றம் செய்ய என்று இவற்றைச் சுருக்கமாகக் கூறலாம். இவைகள் ஒலியினுடைய வேகத்தில் மிக விரைவாக நடைபெறுகின்றன. இத்தகைய இணையம் எப்போது தொடங்கியது, ஏன் தொடங்கியது, என்பதை நாம் பார்க்க வேண்டும். இந்தத் தொடர்பு சாதனங்களை நாம் ஆளவேண்டுமென்ற ஓர் இலட்சிய வாசகத்தை நாங்கள் முன்வைப்பதாயிருந்தால் இந்த வினாக்கள் தேவையானது. இணையத்தை யார் இப்போது ஆளுகிறார்கள், நாம் ஆள்வது என்றால் என்ன, 'நாம்' என்று சொல்லும் போது யாரைக் குறிக்கிறோம், என்கின்ற பல்வேறு கேள்விகளை நாம் எழுப்புவது அவசியம்.

கத்தோலிக்கக் கோயில்கள், அவற்றுடன் தொடர்பு கொண்ட தொண்டு செய்கின்ற தந்தையர்கள், சகோதரர்கள் அவர்களுடைய குழு நாம் என்ற சொல்லை பயன்படுத்தும் பொழுது நான் அதனைப் பின்வருமாறு பொருள் கொள்ளுகின்றேன். அவர்கள் தொடர்பு கொள்ளுகின்ற மக்கள், அவர்கள் வர்க்கத்தால், பால் நிலையால், பிரதேச வேறுபாடுகளால் பல்வேறு பிரிவுகளை உடையவர்கள். ஏழைகள், மிகப் பணக்காரர்கள், ஆண்கள், பெண்கள், மிகவும் பின்தங்கிய கிராமத்தினர்கள், நகரத்தினர்கள் என்று பல்வேறு வகைப்பட்டவர்கள் அவர்களுடைய சேவைக்கு உட்படுபவர்கள். இவ்வாறு சமூகத்தில் காணப்படும் பல்வேறு பிரிவினரையும்தான் திரு/மட். மறை மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு நாம் என்று கருதியிருக்கிறது என நான் கருதுகிறேன். அவ்வாறு 'நாம்' என்பதனுடைய பொருளை விரித்துக் கொண்டால் இந்த நாம் அதாவது நாங்கள் இணையம் தொடர்பான அறிவை எவ்வாறு பெறப் போகிறோம்? எத்தகைய அறிவு நமக்குத் தேவை? இணையம் என்பது பற்றி தெரிய வேண்டு மானால் ஓரளவுக்குக் கணனி அறிவும் அது பற்றிய பின்னணித் தகவல்களும் தேவை. ஆனால் நாம் இணையத்தை அல்லது தொடர்பு சாதனங்களை ஆள்வோமென்றால் இதற்கும் மேலாக எங்களுக்குச் சில அரசியல் ரீதியான, பொருளாதார ரீதியான, சமூக ரீதியான தகவல்களும் சில குறிப்பிட்ட நோக்கு நிலைகளும் எமக்குத் தேவை என்று நான் நினைக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இணையம் சமீபகாலத்தில் குறிப்பாக 80ம் ஆண்டுகளில்தான் இயங்கத் தொடங்கியது, எனினும் 90ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் தான் அதில் ஒரு அபரிமிதமான வளர்ச்சி ஏற்பட்டது. தமிழுக்கு இணையம், இணையத்தளம், வலைப்பின்னல், இணையப் பல்கலைக் கழகம் என்று இணையத்துடன் சேர்ந்த பல சொற்கள் 90ம் ஆண்டின் பிற்பகுதியில் தான் உருவாகின. 1981ம் ஆண்டு 81பேர் மாத்திரமே இணையத்துடன் இணைந் திருந்தனர். 86ம் ஆண்டு இது ஐந்து மடங்காகப் பெருகியது. இதில் பெரும்பாலானோர் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர் களாவர். 1999ம் ஆண்டு 5.6 கோடி கணனிகள் இணையத்துடன் இணைந்தன. இணையத்தைப் பயன்படுத்துபவர் பற்றிய பல புள்ளிவிபரங்கள் இன்று உண்டு. மூன்று அமெரிக்கர் களில் ஒருவர் நாள் தோறும் கணனியைப் பயன்படுத் துகிறார், இணையத்துடன் தொடர்பு கொள்ளுகிறார். தென்கிழக்கு ஆசியாவில் இணையத் தொடர்பு என்பது இருநூறு பேரில் ஒருவருக்கு இருக்கிறது. அரபு நாடு களில் அது ஐநூறு பேருக்கு ஒருவராக இருக்கிறது ஆபிரிக்க நாடுகளில் ஆயிரம் பேரில் ஒருவர்தான் இந்த இணையத்துடன் தொடர்பு கொள்கிறார்கள். இதனை நோக்கும் பொழுது வளர்ந்த நாடுகள் என்று சொல்லப் படுகின்ற நாடுகளில் இன்று அரசியல், பொருளாதார ஆதிக்கம் மிகுந்த நாடுகளாக விளங்குகின்ற குறிப்பாக அமெரிக்காதான் இணையத்தைப் பயன்படுத்துவதில் முன்னணியில் இருக்கிறது. அதுமட்டுமல்ல இணை யத்துக்கான மென்பொருள் உற்பத்தியிலும் அமெரிக் காதான் முன்னணி வகிக்கிறது. அத்துடன் இணை யத்துடன் தொடர்பு கொள்வதில் முதலில் வெள்ளை அமெரிக்கர்கள், அடுத்ததாக ஆசியர்கள். ஏழைக்கறுப் பின மக்கள் இணையத்துடன் தொடர்பு கொள்வது குறை வாகவே இருக்கிறது. இன்று அமெரிக்கா, இணையத் துடன் தொடர்பு கொண்டவர்கள், தொடர்பு கொள்ளா தவர்கள் என்ற சமூ கப்பிரிவை ஏற்படுத்தி விட்டது என்று சமூகவியலாளர்கள் கூறுவார்கள். இந்த இணை யத்தை நாம் அணுகுவதற்கு அல்லது அதன் வழியாகத் தகவல்களைப் பெறுவதற்கு நமக்கு அடிப்படையான சில தேவைகள் உள்ளன. அடிப்படை ஒரு கணனி, அதில் பயன் படுத் தக்கூடிய இணையத்துக்கான மென் பொருள், மின்சாரம், தொலைத்தொடர்பு வசதி, இவற்றை எல்லாம் பயன்படுத்தும்போது மாதாமாதம் ஏறிச் செல்லும் கட்டணங்களைச் செலுத்தக்கூடிய பொருளாதார நிலை, அதற்குமேல் கணனி, இணையம் பற்றிய அறிவு, இவை எமக்கு அடிப்படையான விடங்கள். இந்நிலையில் உலகில் அல்லது எமது சமூகத்தில் எத்தனை பேருக்கு இத்தகைய வசதிகள் உள்ளன, இவை எல்லாரும் அடையக் கூடிய சாதனங்களா, அவ்வாறு அடைவதாயின் அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று பார்க்க வேண்டும். இன்று கணனி, இணையம் இல்லையென்றால் வாழ்க்கை இல்லை, தொழில் வாய்ப்புஇல்லை, முன்னேற்றம் இல்லை என்று பேசப்படுகின்றது. அப்படி என்றால் அதனுடைய உண்மை என்ன? ஏன் அத்தகைய ஒரு நிலைக்கு உலகம் வந்துள்ளது? மின்சாரம் இல்லாத கிராமங்கள் உலகில் அதிகம். அத்தகைய ஒரு நிலை யில் தகவல்களை பரிமாறுவதற்கு, கல்வியைக் கற்ப தற்கு, ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்கு இன்ர நெற் என்ற தொழில் நுட்பம் ஏன் அறிமுகமானது? அத்தகைய தொழில்நுட்பம் ஏன் வளர்ந்தது? இந்தக் கேள்விகளை நாம் கேட்க வேண்டும். அப்படிக் கேட் கும் போது சில விடைகள் எங்களுக்குக் கிடைக்கின்றது. இணையத்துக்கான மென்பொருளை உற்பத்தி செய் கின்ற கம்பனிகள் இதன் மூலம் பெரும் வருமானத் தைப் பெறுகின்றன. பில்கேட்ஸ், மைக்ரோசொவ்ற் இன்ரநெற், ரெல் இந்த மூன்று கம்பனிகளும்தான் இன்று மென்பொருளை விற்பதில் அதிக ஆதாயம் ஈட்டுகின் றன. இவை பெறும் வருமானம் ஏனைய நிலம், உண வுப் பொருள் விற்பனை அல்லது உற்பத்தி, கட்டடம் கட்டுதல் போன்ற தொழில்களில் ஈடுபடுவோர் பெறும் வருமானத்தைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமானது என்பது புள்ளி விபரங்களால் அறியப்படுகின்ற உண்மை பங்குச் சந்தைகளில் தகவல் தொழில் நுட்பத்தில் தொடர் புள்ள நிறுவனங்கள் பெறுகின்ற இலாபங்கள் அதிகம். இத்தகைய ஒரு பின்னணியில் இலங்கையில் எத்தகைய ஒரு நிலைமை உள்ளது? கொழும்பு, கண்டி போன்ற நகரங்களில் இணையச் சாலைகள் உள்ளன. அவை களில் நாம் பணம் கொடுத்து இணையத் தொடர் புகளைப் பெற்றுக் கொள்ளலாம். மட்டக்களப்பில் இணை யத்தின ஊடாகத் தகவல்களைப் பெற, அனுப்ப இது வரை காலமும் இரண்டு நிலையங்களே (Communi Cations Cenntre) இருந்தன. அண்மையில் புதிதாக இன்ர நெற்கபே ஒன்று திறக்கப்பட்டது. ஆனாலும் எங்களுக்கு மின்சாரம் இல்லாத நிலை, கணனிகளை வாங்குவதற்கு, பயன்படுத்துவதற்கு பணவசதி இல்லாத நிலை, தொலைத் தொடர்பு வசதிகள் எல்லாப் பகுதியிலும் எல்லோரிடமும் இல்லை. இன்றையக் கணக்கின்படி இலங்கையில் ஆயிரத்தில் 271 பேருக்குத்தான் தொலைத் தொடர்பு வசதிகள் இருக்கின்றன. மட்டக்களப்பில் இதைவிடவும் மிகமிகக் குறைவாகவே இருக்குமென்று எண்ணு கிறேன்.

ஏனெனில் இலங்கையில் ஒருவர் பெறுகின்ற ஒரு மாத வருமானம் 7300 ரூபாய். மட்டக்களப்பில் ஒரு வருடைய மாத வருமானம் 3336 ரூபாய். இது தான் எங்களுடைய சராசரி வருமானம். இத்தகைய ஒரு வறுமை நிலையிலிருக்கின்ற எமது நாடு, எங்களுடைய மாவட்டம் கணனி மூலம் தொடர்பாடுவது, கற்பது, தகவல் பரிமாறுவது என்பது எவ்வளவு தூரம் சாத்தியமானது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே கணனி இல்லாமல் எதுவு மில்லை; இணையம் இல்லாமல் எதுவும் இல்லை என்ற கருத்துக்கும் எங்களுடைய யதார்த்த நிலைக்கும் பாரிய இடைவெளி உண்டு

இன்று பாடசாலைகளில் கணனி அறிமுகப் படுத்தப்படுகிறது, நல்ல விடயம். ஆனால் அதனை பயன்படுத்தக் கூடிய வசதி உள்ளனவா? தொலை பேசி உள்ளனவா? இந்த நிலையில் இது ஒரு செயல் முறையாக மாறாது என்பது என்னுடைய கருத்து. ஏனெனில் இந்தியாவில் ஆறாம் திணை என்னும் இணையத்தளம் உள்ளது. 2000ம் ஆண்டிலிருந்து இதனை நான் பயன்படுத்திவருகின்றேன். தமிழிலக் கியம் சம்பந்தமான காத்திரமான விடயங்கள் இதில் வரும். ஆனால் இணையத்தளத்தை நாம் பார்ப்பதா யின் பணம் செலுத்த வேண்டும், மின்சாரம் கிடைத்து, தொலைபேசி கிடைத்து, பல்வேறு பகுதியினருக்கும் அத்தகைய குறைந்த விலையில் எல்லோருக்கும் கிடைக்கும் நிலை ஏற்பட்டாலும் சில இணையத் தகவல் களைப் பெறுவதற்கு, கல்வியை, அறிவைத் தருகின்ற இணையத்தளங்களுக்குச் செல்வதற்கு எமக்குப் பணம் வேண்டும். இத்தகைய பிரச்சினைகள் இணையத்தளத்தை அணுகுவதில் காணப்படுகின்றன. இணையத்தளத்தை நாம் அறிந்து கொள்ளுவதற்கு இது மிக முக்கிய மானது.

இணையத்தளங்களின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான காரணம் உலகளாவிய வர்த்தகம். இன்று உலகமயமாக்கல், உலகச் சந்தை என்றெல்லாம் பேசுகி றோம். இதற்கு உலகளாவிய வர்த்தகமே, அரசியல் ரீதியான ஆதிக்கமே காரணமாகும். 1998ம் ஆண்டு கிறிஸ்மஸ் திருநாளுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னால் E. வர்த்தகம் என்று சொல்லப்படுகின்ற இணை யத்தளங்களுடாக பொருட்களை வாங்கி விற்கின்ற முறையில் 500 கோடி அமெரிக்க டொலர்களுக்கு வியாபாரம் செய்யப்பட்டதாகக் கணகிடப்பட்டுள்ளது. எங்கள் நாட்டில் இது மிகக் குறைவு. இந்தியாவில் இவ்வாறான வாத்தக முறை இன்று ஊக்குவிக்கப் படுகிறது. இவற்றில் 90 வீதமான வர்த்தகம் கம்பனி களுக்கிடையே நடைபெறுகிறது. 10 வீதம் நுகர்வோர் இணையத்தளங்களைப் பயன்படுத்தி பொருட்களை வாங்குகிறார்கள். இவைகளை நாம் இன்றைய எமது சமூக நிலையில் கற்பனை செய்து பார்க்க முடியாது. இவை பொருளாதார ஏகாதிபத்தியம் கொண்ட நாடு களுக்குத்தான் பொருத்தமானது. நான் கூறுவதிலி ருந்து கணனியைப் பற்றிய எதிர்மறையான கருத்தை நான் தருவதாக நீங்கள் கருதக் கூடாது. அந்தத் தொழில் நுட்பம் முக்கியமானது. விரைவாக மிக இலகுவாக பலருடன் தொடர்பு கொள்ளக் கூடிய அத்தகைய ஒரு வசதி மனித சாதனையில் முக்கியமானது. ஆனால் இத்தகைய ஒரு தொழில் நுட்பம் யாருடைய கையில் இருக்கிறது, ஏன் இருக்கிறது, என்ற அறிவுதான் இவற்றை ஆளுவதற்கு எமக்குத் தேவை. இதனைச் செய்தித் தொடர்புகளில் பார்க்கலாம். உலகில் றோய் ட்டர், இன்ரபிரஸ் இன்ரநேசனல் போன்ற ஐந்து பெரிய செய்தி நிறுவனங்கள்தான் 90 வீதமான செய்திகளைக் கட்டுப்படுத்துகின்றன. இச்செய்தி நிறுவனங்கள் அனை த்தும் வளர்ச்சியடைந்த நாடுகள் என்று கூறப்படும் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவை. ஏனென்றால் இது ஒரு பெரிய வர்த்தகம். செய்திகளைக் கொடுப்பது, வாங்குவது, பரிமாறுவது என்பது ஒரு பெரிய வர்த்தகமாக நடந்து வருகிறது. இந்த வர்த்தக வளர்ச்சியினுடைய ஒரு தொடர்ச்சிதான் கணனி, அதன் மூலமாக இணையம் என்பதெல்லாம். இத்தகவல் தொழில் நுட்பம் பற்றி சமூகவியலாளர்களிடையே இன்று விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது. உலகின் முற்போக்கு சக்திகளிடையே இவைபற்றிய விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது. நோம்சொம்ஸ்கி என்னும் அமெரிக்க மொழி யியலாளர், இவர் சமூகவிடயங்களில் மிகவும் அக்கறை கொண்டவர். இவர் தொடர்பூடகப் பயங்கரவாதம் என்னும் சொல்லை உருவாக்கினார். அது எவ்வாறு செய்திகளை கட்டுப்படுத்து கிறது, மனிதரைக் கட்டுப்படுத்துகிறது, அதிகாரத்துக்கு எவ் வாறு துணைபோகிறது என்பதை அவர் இதன் மூலம் விளக்க முனைந்தார். இன்று தொடர்பு சாத னங்களுடைய மோசமான பக்கங்களை நாங்கள் காண்கின்றோம். இன்று இந்தக் கணனி என்கின்ற தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மோச மான விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இவற் றுக்குப் பலியாகு வோர் அதிக அளவில் பெண்களும் சிறுவர்களுமே. அதே வேளை இந்த இணையத்தளங் களைப் பயன்படுத்தி தங்களிடையே, இறுக்கமான தொடர்புகளை ஏற்படுத்தி, அவற்றை சமூக நலக் கோரிக் கைகளுக்காகப் பிரசாரம் செய்கின்ற, செய்திகளை அறிவிக்கின்ற தளங்கள் உள்ளன. உலகில் சமூக நீதி கோருகின்ற நிறுவனங்களுக்கிடையே, அமைப்பு களுக்கிடையே இத்தகைய இணையத்தளங்களினூ டான தொடர்பாடல்கள் உள்ளன. அவற்றின் வழியாக மிகவிரைவாக அநீதிகளை, அவலங்களை அவை உலகத்தின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றன. தொடர்பூடகங்களை ஆள்வது என்பது இது போன்ற நல்ல விடயங்களுக்கு, சமூக நீதி கோருகின்ற விடய ங்களுக்கு அவற்றைப் பயன்படுத்துவது முக்கிய மானது. அவை பற்றிய அறிவு, விழிப்புணர்வு எமக்குத் தேவை, இங்கே நான் கூறியவை உங்கள் சிந்தனை யைத்தூண்டினால் மகிழ்ச்சியடைவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் சகாக்களுக்கு!......

எழுதுங்கள்!
கவிஞர்களே எழுதுங்கள்
பண்டிதர் பாணியிலல்ல
பாமரன் பாஷையிலும்

பலர் கவிதைகள்
பலருக்கு இன்று
தூரத்தில் பார்த்த திருவிழாத் திருப்பலிகள்

எழுத்துக்கள்!
நாம் தவமிருந்து பெற்ற
தத்துவப்பிள்ளைகள்
ஆபத்துக்குதவாப் பிள்ளை
அரும்பசிக்குதவா அன்னம்?....

நம்மூர்த் தொலைக்காட்சி
ஆங்கிலச் சிரிப்புச் சித்திரங்களைப்போல்
ஆங்காங்கே சிரிப்பைப் போல்
கவிதைக்குரிய சில அடையாளங்கள்

கவிதையென்றால்,
எதுகை, மோனை, சீர், அடி, தளை
தொடை மாறி
வகுப்பறைக் கடைவரியில்
வாத்தியார் வாசித்ததை
எழுதியதுபோல் ..... சில....

பெய ரெடுத்த கவிஞர்கள்
பாதிப் பேர் கவிதைகள் - பலருக்கு
நம் நாட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தமாய்
இன்னும்....

ஒரு கவிஞரைக் கேட்டேன்
குறியீட்டை குறைக்கக்கூடாதா?
குறியீட்டை குறைத்தால் - என்
தரம் போகும் என்றார்
கவிஞரே!
நம்மில் பலருக்கு கம்பனைத்தெரியாது
வைரமுத்துவை அதிகம் தெரியும்.

பொன்னாடைக்கும்
சாகித்தியப் பரிசுக்கும்
நம் பேனாக்கள் வாந்தி எடுக்காமல்
புரியும் பாஷையில்
தலை குனியட்டும்

எழுதுங்கள்!
கவிஞர்களே எழுதுங்கள்
பண்டிதன் பாணியிலல்ல
பாமரன் பாஷையிலும் . . .

**மூதூர் ஜெகதீசன்**
**அகிலன் குருஸ்**

# இறையன்பு மேலானது,

சுயநலத்தில் கிடந்தூறி
சுற்றத்தை மறந்ததென்ன
பிறநலத்தில் ஈடுபட
மாற்றி யமைத்த - தேவா
உம் அன்பு மேலானது
உம் அன்பு மாறாதது!

கல்லான நெஞ்சம்
கரையாது போனதென்ன
சிலுவைக் காட்சியால்
கரைத்திட்ட - தேவா
உம் அன்பு மேலானது
உம் அன்பு மாறாதது!

சிறகொடிந்த பறவையாக
சீரழிந்து நொந்ததென்ன
கைவிடாத கருணையினால்
காத்திட்ட - தேவா
உம் அன்பு மேலானது
உம் அன்பு மாறாதது!

சந்தேக வெறிகொண்டு
சந்தோஷம் இழந்ததென்ன
சந்தேகம் தீர்ந்து
தெளிவு தந்திட்ட - தேவா
உம் அன்பு மேலானது
உம் அன்பு மாறாதது!

அலைமோதும் துன்பக் கடலில்
அலைக்கழிந்து போனதென்ன
அன்புக் கரம் கொண்டு
அரவணைத்திட்ட - தேவா
உம் அன்பு மேலானது
உம அன்பு மாறாதது!

**ஆக்கம் :-** அரியாலையூர் வி.பி தனேந்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த ஆகஸ்ட் மாதம் 22ம் திகதி மட்/சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற

# உலகத் தொடர்புதின விழாக் காட்சிகள்



உலகத் தொடர்பு தினவிழாவிற்கு வருகைதந்த அதிதிகள் பேராசிரியர் எம்.எஸ். மூக்கையா, பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு, அருட்தந்தை போல்சற்குணநாயகம் யே.ச - மாலை சூட்டி ஆராத்தி எடுத்து வரவேற்கப்படுகிறார்கள்.

இவ்வாண்டுக்கான தொடர்பு சாதன விருது பெற்ற திருமதி புவனேஸ்வரி அகஸ்டின் அவர்கள் மங்கல விளக்கேற்றுகிறார்.





வரவேற்புரை நிகழ்த்துகிறார் சமுகத்தொடர்பு ஆனைக் குழுவின் தலைவர் J.A.G. இரட்ணகுமார் அவர்கள்.

மட்டக்களப்பு தொடர்புசாதனங்கள் பற்றிய விழாவா என்று வியக்கிறார் கிழக்குப்பல்கலைக்கழகத் துணைவேந்தர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்டன் – மட்டக்களப்பு மாவட்டச் சிறப்பு மலரை அறிமுகம் செய்துவைக்கிறார் திரு. தீசன் ஜெயராஜ் *(உதவி நூலகர், கி. ப. கழகம்)*

உலகத் தொடர்பு தினவிழாவில் அரங்கேறிய ‘உண்மை ஒரு நாள் வெளிவரும்’ நாடகத்தில் ஒரு காட்சி.





திருப்பாடல்கள் இசைநாடாக்களை (4ம்,5ம்,6ம் பாகங்களை) வெளியீட்டுக்காக அறிமுகம் செய்து வைக்கிறார் அதன் தயாரிப்பாளரும், பாடலாசிரிய ருமான திரு அம்புரோஸ் பீற்றர் அவர்கள்.

உலகத் தொடர்பு தினவிழா விற்கு வருகைதந்து மண்ட பத்தை நிறைத்த மக்களின் ஒரு பகுதி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவுகள்

**"மனிதனே...... நீ மண்ணாக இருக்கின்றாய் மண்ணுக்கே திரும்புவாய்"** *(தொ.நூ. 3:19)*

பிறப்புக் கொண்ட மனிதன் இறப்பையும் என்றோ ஒருநாள் சொந்தம் கொள்வான் என்பதை யாராலும் மறுக்க இயலாது. இறைவனே வேதாகமத்தின் தொடக்க நூலில் இந்நிபந்தனையை விதித்த பின் இதற்கு யாரும் விதிவிலக்கு அல்ல. ஆனாலும் எம் மத்தியில் இறப்புக்கள் நிகழும்போது அதனைத் தாங்கும் மனநிலையை நாம் அதிகம் கொண்டிருப்பதில்லை. அதுவும் எம்மால் மிகவும் நேசிக்கப்பட்டவர்கள் பாதியிலேயே எம்மை விட்டுப் பிரிந்து செல்லும் துயரம் மிகமிகக் கொடியது. அந்த வேதனைகள் எமது வாழ்வின் மீதிவரை வாட்டுவது வியப்புக்கு உரிய விடயம் அல்ல.



இந்த வகையிலே, எம்மத்தியில் ஒருவருட ஒரு மாத, ஒருவார காலப் பணியை முடித்து இறைபதம் அடைந்த அருட்பணி டொனேசன் காலத்தின் கரங்களில் செதுக்கப்படாத ஒரு கல்வெட்டு.

பதினான்கு வருடக் கனவுகள், 2000ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 24ம் நாள் நனவாக, புத்தம் புதிய மிலேனியம் குருவாய் டொனேசன் எம் பங்கிற்கு நன்கொடை ஆக்கப்பட்டார். வந்த சில நாட்களிலேயே விவேகமும் வேகமும் நிறைந்த தன் சேவையை அள்ளி வழங்கினார். இளமைத் துடிப்புடன் செயலாற்றினார். அவரது சிந்தனைகள் ஒவ்வொன்றும் எமது பேராலயத்தின் எழுச்சிக்கும், பங்கு மக்களது நல்வாழ்வின் வளர்ச்சிக்கும் சிந்திய நீராகியது.

"மக்கள் பணியே மகேசன் பணி" என்பது அவரது நாவில் அடிக்கடி தவழும் வார்த்தைகள். ஆம், அந்த வார்த்தைக்கேற்ப தன் வாழ்வை அர்ப்ப ணித்தார்.

பல காலமாய்ச் சீரற்றுக்கிடந்த எமது பேராலய வளவை ஒருசில மாதங்களில் பூஞ்சோலை யாக்கினார். அச்சோலையின் செழிப்பிற்காய் தன் நேரத்தையும் செலவழித்தார். அதுமட்டுமல்ல பங்கின் நிர்வாகக் காரியங்களில் புதிய புதிய விடயங்களைப் புகுத்தினார். மக்களின் ஆன்மீகக் காரியங்களில் முன்னின்று உழைத்தார். இளைஞர் ஒன்றியத்தின் முதுகெலும்பானார். மறைஞானம் புகட்டும் போதகரானார். அன்பியங்களின் வளர்ச்சியில் அயராது உழைத்தார். வழிதவறிய இளைஞர்களை தனது அன் பாலும் அரவணைப்பாலும் நல் வழிப்படுத்தினார். ஒவ்வொரு பங்குக் குடும்பத்தின் தனிப்பட்ட ஆன்மீகக் காரியங்களில் அக்கறை கொண்டவராய் குடும்பத்தரி சிப்புக்களில் ஈடுபட்டார். புனித சூசையப்பர் கல்லூரியின் வளர்ச்சிக்காய் தன்னை அர்ப்பணித்தார். உதவி வேண்டி வந்தோருக்கு மறுக்காது உதவிபுரிந்தார். இதனை விட மேலாக பங்குத்தந்தைக்கு ஒரு வலக்கரமாய், தோளோடு தோள் கொடுத்து அனைத்துக் காரியங்களிலும் அவருக்கு உறுதுணையாக இருந்தார். இவரது காலடிபடாத இடமே இல்லை. அதே போல் இவர் தங்காத உள்ளங்களில்லை.

இத்தனை விவேகமும்; வேகமும்; அன்பும், கண்டிப்பும் கருணையும் மிகுந்து, அனைவரது உள்ளத்திலும் நீங்காத இடம் பிடித்து, வரலாறு காணாத வல்லவனாய் இருந்த வேளைதான் பேரிடி யாய் எம்மைவிட்டு சதா காலத்திற்கும் நீங்கிச் சென்றார்.

வளர்ச்சிக்காய் அவர் கொண்ட வேகம் அவரது வாழ்க் கைக்கே முற்றுப்புள்ளி வைத்தாற்போல் தோன்றுகின்றது.

மட்டக்களப்பு சென்று, திருமலை திரும்பும் வழியில் பாலம்பட்டாரம் எனும் பூமியிலே கோரவிபத்தில் சிக்குண்டார். ஈரிரண்டு தினம் கோமா நிலை கண்டு, இறுதியில் 2001ம்அண்டு செம்டெம்பர் 4ம் திகதியான செவ்வாய்க்கிழமை யன்று மரணம் எய்தினார்.

குதூகலம் கொண்டிருந்த எம் மனங்கள் குட்டிச் சுவரானது. ஆனந்தம் கொண்டிருந்த எம் கண்கள் அழுது அழுது அழிந்து போனது. மரண சோகத்தின் சுமைகள் எம் நெஞ்சை அழுத்தியது.

ஒரு வருடம் கடந்தும், இதோ நேற்று நிகழ்ந் தாற்போல், அந்த நாள், மீண்டும் மீண்டும் எம் நினை வலைகளின் நிரல்களில் வந்து போகின்றன.

அவர் வாழ்ந்து காட்டிய வாழ்வும், அவர் போதனைகளும், தொடரும் எம் பங்கின் பரம்பரைக்கு ஒரு சிறந்த அடிச்சுவடு. இது ஓர் அழியாத காவியம், முடிந்தாலும், முற்றுப் பெறாத தொடர் கதை.

இன்னமும் அவர் எம் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இன்னமும் எம் கண்கள் கண் ணீர் சிந்திக்கொண்டிருக்கின்றன. இன்னமும் அவரது பெயர் எமது உதடுகளால் உச்சரிக் கப்பட்டுக் கொண் டே இருக்கின்றது.

உத்தம செயல்களால், உத்தமராகி, உன்ன தரை அடைந்த எம் அன்பு அருட்தந்தை டொனேசனின் ஆன்மா நித்திய இளைப்பாற்றியைப் பெற்று, இறைவனின் இல்லத்தில் நிரந்தரம் பெற நாம் தினம் மன்றாடுகின்றோம்.

"அந்த நீதிமான் குறுகிய காலத்தில் நிறைவு எய்தினார்: நீண்ட வாழ்வின் பயனை அடைந்தார்" (சா.ஞா. 4:13)

**ஆக்கம் - ப.வ. ஷாலினி**
புனித மரியாள் பேராலயம்
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் நடைபெற்ற 17வது உலக கத்தோலிக்க இளைஞர் தினம்

## பயணக்கட்டுரை

ஆர். ஸ்டான்லி பிரபாகரன்
வழிப்படுத்தும் குழு உறுப்பினர்,
கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் – திரு/ மட். மறைமாவட்டம்

இது எனது இரண்டாவது வெளிநாட்டுப் பயணம். இலங்கையிலிருந்து சென்ற கத்தோலிக்க இளைஞர் குழுவில் மூன்று குருக்கள் உள்ளடங்கலாக 16பேர் இருந்தோம். எமது குழுவுக்குப் பொறுப்பாக இருந்தவர் அருட்தந்தை: டபிள்யூ.டி. ஜி. கிறிஸ்பின் லியோ. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மூன்று மறை மாவட்டங்களான யாழ்ப்பாணம் (4பேர், மன்னார் (3பேர்) திருகோணமலை - மட்டக்களப்பு (3பேர்) ஆகிய வற்றிலிருந்து பத்துப்பேர் தெரிவு செய்யப்பட்டோம் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து திரு. சி. நிக்ஷனும் நானும், திருகோணமலை மாவட்டத்திலிருந்து திரு. மாலிந்த சில்வாவும் தெரிவு செய்யப்பட்டோம்.

நாங்கள் யூலை 09ம் திகதி இலங்கை கட்டு நாயக்கா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டோம். விமான நிலையம் என்பது ஒரு தனி Systerm தான் என்பதை எனது அனுபவங்கள் வெளிக்காட்டின. புதிதாக விமான நிலையம் செல்பவர்களுக்கு நான் ஓர் ஆலோசனை கூறலாம். ஆங்கிலம் தெரிந்திருப்பது பேருதவியாக இருக்கும். பயணத்திற்கு முன்னர் முன் அனுபவம் உடையவர்களிடம் நடைமுறைகள் பற்றிக் கேட்டுக் கொள்ளவேண்டும். தெரியாமல் சென்று குழம்பினால் பயணம் மகிழ்ச்சியாக அமையாது. தூதரகம் சென்று வீசா பெறுவது தொடக்கம், விமானத்தின் நுழைவாயில் செல்லும் வரை சொந்த முயற்சிக்கு முன்னுரிமை உண்டு. விமானத்தினுள் சென்ற பின் நல்ல கவனிப்பு. 32000 அடி, 40000 அடிகளுக்கு மேலால் பறக்கின்றோம் என விமான அறிவிப்பும், எனது அறிவும் கூறினாலும், பய உணர்வுக்குப் பதிலாக உற்சாகமே தோன்றியது. காரணம் திட்ட மிடப்பட்டிருந்த சூழ் நிலைதான். உணவும், உறக்கமும், உபசரிப்பும், தொலைக்காட்சியும் நேரம் போனதைக் காட்டவில்லை. இதே உணர்வுதான் சக பயணிகளுக்கும் இருந்திருக்கும்.

கனடா விமானநிலையத்தில் யூலை 10ம் திகதி இறங்கினோம். இனி கனடா நேரமும் திகதியும் தான். விமானநிலையத்தில் எம்மை வரவேற்க திரு: அன்ரன் சின்னராசா காத்திருந்தார். இவர் இலங்கைத் தமிழ் மக்களுக்கு நன்கு பரிச்சயமானவர். எமது குழு வினரில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து சென்றவர்களது தேவைகளை ஒழுங்கமைத்தவர்.



கனடிய வீதியில் உலக இளைஞர்களுடன் ஊர்வலம்


பின்னர், நாம் தங்க வேண்டிய வீடுகளுக்கு அனுப்பப் பட்டோம்.

நாம் கனடாவுக்கு செல்வதற்கான பயண ரிக்கட் முதலானவற்றிற்கு அனுசரனை செய்தவர்கள் கனடாவில் வசிக்கும் இலங்கைத் தமிழ் கத்தோலிக்கர்கள். குறிப்பாக ஸ்காபிரோ, புனித மரியகொரட்டி தேவாலயப் பங்கு மக்கள், இதற்கான செயற்றிட்டத்தை நடத்தியவர் அத்தேவாலயத்தின் பங்கு தந்தையான அருட்தந்தை பற்றிக் என்பது குறிப்பிடத்தக்கது. புனித மரிய கொரட்டி தேவாலய பங்கு மக்களால் இலங்கையிலிருந்து சென்ற எமக்கு ஒரு வரவேற்பு விருந்து பசாரம் நடைபெற்றது. அங்கே பல இலங்கையர்கள் வருகைதந்திருந்தனர். இத்தகைய அனுபவங்கள் கனடா பற்றிய எனது கருத்தை மெல்ல மெல்ல மாற்றத் தொடங்கின. இலங்கையிலிருந்து புறப்பட்ட போது கனடா ஓர் அந்நிய பண்பாட்டு நாடு என்ற எண்ணம் இருந்தது. ஆனால் அங்கே பல இலங்கையர்களை எமது பண்பாட்டுச் சாயலுடன் கண்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வெண்ணம் மாறியது. சரளமாக இலங்கைத் தமிழையும் கேட்கக் கூடியதாயிருந்தது. நான் கனடா வில் தங்கியிருந்த ஒரு மாதத்தில் சில நாட்கள் தவிர ஏனைய நாட்களில் அந்நிய பண்பாட்டு நாடு என்ற எண்ணமே இல்லாது இருந்தது. இலங்கையிலிரு ந்து சென்ற எம்மைக்காண, கனடாவில் வசிக்கும் பல இலங்கையர்கள் வந்திருந்தனர். இலங்கையின் தனித் துவம் மாறாது. கனடாவின் சூழ்நிலைக்கு தம்மை இசை வாக்கிக் கொண்டு வாழ்பவர்களாகத் தம்மை அடையா ளப்படுத்திக் கொள்ளும் அவர்களது இருப்பு வெளிப் பட்டது. எம்முடன் பழகும்போது தமது பழைய உணர் வுகள் மீளப் பெற்றவர்களாக மகிழ்ச்சியாக உரை யாடினார்கள்.



மட்டக்களப்பு தந்த முதறிஞர் ஈழத்துப் பூராடனாருடனும் மற்றும் நண்பர்களுடனும் கட்டுரையாளர்.

அருங்கொடை இயக்கத்தின் செபவழிபாடு இன்னுமொரு அனுபவமாகும். இலங்கையில் நடை பெறும் அருங்கொடை வழிபாட்டுத் தாக்கம்அதில் தென்பட்டது. திரு. யேசுதவராஜன் அந்த வழிபாட்டை நடத்திக் கொண்டிருந்தார். கனடாவின் தமிழ்க் கத்தோலிக் கர்கள் புனித மரியாயின் சேனையும் நடத்திக் கொண்டு இருக்கின்றமை எனக்கு வியப்பையே தந்தது.

உலக (கத்தோலிக்க) இளைஞர் தினத்தை (World (Catholic) Youth Day - WYD - 2002) முன்னிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வுகள் 18ம் திகதி ஆரம் பமாயின. 18-21ம் திகதி வரை கனடா வாழ் மக்களின் குறிப்பாக வெள்ளையரது பங்குகளில் தங்கியிருந்து அவர்களது உபசாரத்தைப் பெறுதலும், அவர்களோடு கலந்துரையாடுதலும் முக்கியமான நிகழ்வாகும்.

16 பேரும் 17ம் திகதி டொரொன்டோவில் இருந்து "லன்டன் ஒன்டாரியோ" (கனடாவிலேயே உள்ள இடம்) என்னும் இடத்துக்குப் புறப்பட்டோம். செல்லும் வழியில் உலக அதிசயங்களில் ஒன்றான நயாகரா நீர்வீழ்ச் சிக்குச் சென்றோம் .நதியின் ஒருகரையில் அமெரிக்க ஐக்கியக் குடியரசு, மறுகரையில் கனடா. இயற்கை யாக நதி இரண்டு நாட்டையும் பிரித்திருந்தது. ஆனால் வானவில் பாலம் (RAINBOW BRIDGE) என்னும் பாலத் தால் மனிதன் இணைத்த விந்தை மனதைவிட்டகலாது. ஆறுசிந்தும் நீரும், நீர்வீழ்ச்சி பிறப்பித்த நீர்த்துளிகளும் உள்ளத்திற்குக் கிளுகிளுப்பூட்டின. அந்த நீர்வீழ்ச்சிக்கு அருகில் இருந்தபோது தெரிந்த Rainbow Bridge அறிவை ஆட்கொண்டது. செயற்கையும், இயற்கையும் கலந்துள்ள இந்த அழகை இரசிப்பது என்பது இரச னையில் ஒரு தனி ரகம், விந்தை! அங்கு ஏராளமான வர்கள் இயற்கையை இதமாக இரசித்தனர்.

அன்று மாலை ரில்பெரி (Tillbery) என்னும் இடத்தைச் சென்றடைந்தோம். வெள்ளை யர்களது வீடுகளில் தங்கியிருந்து அவர்களது வாழ்வியல் அம் சங்களை நேரடியாகக் கண்டு, அவர்களோடு அளவளாவக் எனக்குக்கிடைத்த மறக்கமுடியாத அனு பவம் இது. அவர்களது உணவு முறைகள், குடும்ப அமைப்பு, ஒருநாட் பொழுதை அவர்கள் கழிக்கும் விதம் என்பன வற்றை நேரடியாகவே கண்டேன். நாம் தங்கியது இயற்கைச் சூழலும் விவசாய நிலங்களும் உள்ள ஒரு பகுதி. ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் உருளைக் கிழங்கு, சோளன், சோயா முதலானவை பயிரிடப்பட்டிருந்தன. நீர் விசுறும் இயந்திரத்தினால் பயிருக்கு நீர் வழங்கப்பட்டது. இலங்கையில் விவசா யத்துறைக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் பற்றி நான் சிந்தித்தேன்: பல வேறுபாடுகள் அந்த வகையில், நவீன தொழில் நுட்பங்கள் எந்த அளவுக்கு இலங்கை விவசாயத் துறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும். மரபுரீதியான பயிர்ச் செய்கை முறையுடன் மிகக் குறைந்தளவி லேனும் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவது நம் நாட்டு விவசாயிகளுக்கு கடினமாகவே உள்ளது. பாரிய அளவிலான பயிர்ச்செய்கையும், நவீன தொழில் நுட்பப் பயன்பாடும் உள்ளதினால், அங்கு உணவுப் பொருட்களின் விலை பொதுவாகக் குறைவாகவே உள்ளது. ஒருவர் தனது ஒருநாள் வருமானத்தில் குறை ந்தளவு வருமானத்தையே தனது உணவுக்காகச் செல விட நேரிடுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் தங்கியிருந்த இடம் ஒரு கிராமம் தான், ஆனால் வீடுகளில் இன்ர நெற்றும், ஈமெயிலும் உண்டு. உயர்ந்த மாடிக்கட்டிடங்கள் இல்லை. ஆனால், பல வசதிகளும் உண்டு. இவற்றையெல்லாம் பார்க்கும் போது உலகு கண்டுள்ள முன்னேற்றத்துடன் ஒப்பிட்டால் நாம் எங்கே நிற்கின்றோம், ஏன் பன்னிற்கின்றோம் என்ற வினாக்கள் எழுந்தன. எமது நாட்டின் முன்னேற்றம் குறித்துச் சிலர் சிந்தித்துச் செயற்படுகின்றார்கள். ஆனால், இன்னமும் நாம் ஏன் முன்னேற வில்லை? இதற்கு ஒரு முக்கிய காரணம் முன்னேற்றம், அபிவிருத்தி என்பனபற்றிய அறிவும், பிரக்ஞையும் எம் சமூகத்தில் எல்லோரிடமும் தோன்றாததுதான் எனலாம். இளைஞர்கள் இதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ஒருவர் அபிவிருத்திக்குத் திட்டமிட, மற்றவர் அதை அழித்து தனது தேவைகளைப் பூர்த்தி செய்தால் எங்கே முன்னேறுவது? ஒருவரது திட்டத்தை மற்றவர் மதிக்க வேண்டும், ஏற்று நடக்க வேண்டும், ஒத்துழைக்க வேண்டும். கனடாவில் வீதியில் நடப்பட்ட இலையைத் தானும் கிள்ளினால், அது அநாகரீகம், இப்படிப்பட்ட அனுபவம் ஒன்றை கனடாவிலுள்ள இலங்கையர் ஒருவர் என்னுடன் பகிர்ந்து கொண்டார். மேலும், வீதியைக் கடக்கும் பாதசாரிகள் (பொதுவாக) கடப்பதற்கான சமிக்ஞை (Singnal) விழும்வரை பொறுமை யாகக் காத்திருப்பர். வீதியில் வாகனங்கள் செல்லாமல் வீதி வெறுமையாக இருக்கும் போதும் வீதியைக் கடக்கத் தயங்குவர். வீதிப் பொலிசாரின் கண்காணிப்பு முதலான பின்னணிக்காரணிகள் ஒருபுறம் இருக்க, அவர்கள் சட்டத்திற்கு அமைவ்தில் எவ்வளவு கவனமாக இருக்கின்றார்கள் என்பது போற்றத்தக்கது.ஆனால், நம் மவரில் இங்கே காரணமின்றி வீதி ஒழுங்குகளை மீறி மற்றவர்களது போக்கு வரத்துக்குத் தடையாக இருப்பவர்களுக்கு இதனைச் சிறியதொரு எடுத்துக் காட்டாகக் கூற விரும்பகின்றோன். இதைவிடப் பொது உடைமைகளான கட்டிடம் முதலானவற்றைப் பிரித்தெடுத்து தம் வீடுகளைக் கட்டிக் கொள்பவர்கள் உணரும் வரை நம்சமூகம் அபிவிருத்தியில் பின்னடைந்தே இருக்கும்.

Tillbery மக்கள் எம்மை அன்பாக உப சரித்தார்கள். எம்மைத் தம் குடும்பங்களில் ஒருவராகவே ஏற்றுக் கொண்டு கவனித்தார்கள். பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே நல்லுறவுடைய குடும்பங்களை அங்கே தரிசித்தோம்.

அங்கே தங்கியிருந்த நாட்களில் புனித பற்றிக் தேவாலயத்திற்கு வேறு சில நாடுகளில் இருந்தும் இளைஞர்கள் வந்திருந்தனர். அங்கே மரியன்னையின் திருச்சுரூப ஊர்வலம், திருச்செபமாலை,



திருப்பலி, பின்னர் விருந்துபசாரம் என்பன இடம் பெற்றன. அத்தேவாலயத்தின் தனிச்சிறப்ப என்ன வெனில் அங்குள்ள பூந்தோட்டத்தில் ஏறக்குறைய எல்லாப் புனிதர்களின் திருச்சுரூபங்களும், அவர்களது வரலாறுகளும் இருந்தன.

இத்தகைய பல அனுபவங்களைத் தொடர்ந்து Tillbery மக்களைப் பரிந்த துயரம் மறக்க முடியாது. நாம் அவர்களிடம் இருந்து விடை பெறம் போது பிரிவுத் துயர் தாங்க முடியாது கட்டியணைத்துக் கண்ணீர் சிந்தினர். பாசம் தோல்களின் நிறங்களாலும், நாட்டுப் பண்பாடுகளாலும் தடைசெய்யப்பட முடியாது, மனிதருடன் மனிதர் பழகும் போது இயல்பாக உருவாகும் உணர்வு அல்லவா அது.◆

தொடரும்...

## பிழைதிருத்தம்!

கடந்த ஜூலை-ஆகஸ்ட் தொண்டன் மட்டக்களப்பு மாவட்டச்சிறப்பிதழில் இடம் பெற்ற வியாகுலமாதா ஆலயமும் காணிக்கைமாதாவும் என்னும் கட்டுரையில், 24ம் பக்கத்தில் மூன்றாவது பந்தியில் 1824 மட்டக்களப்பின் என்பதை 1624 மட்டக்களப்பின் என்று திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

– ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைப்பதெல்லாம்.........

## சிறுகதை

அந்தோனி கொண்டு வந்திருந்த மீனைச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள் அன்னம்மா. மீனை நன்கு அலசிக் கழுவி, கழுவிய நீரைப் பக்குவமாய்க் கொண்டு வந்து, வேலியோரமாய் நின்றிருந்த அந்த முருங்கை மரத்தின் அடியில், மரத்தைச் சுற்றி வெட்டியிருந்த பாத்தியில் ஊற்றி விட்டு மெல்ல நிமிர்ந்தாள். மெலிந்த பச்சிலைப் பாம்புகளைப் போல பரவலாகத் தொங்கிக் கொண்டிருந்த பிஞ்சு முருங்கைக் காய்களைப் பார்த்து அன்போடு சிரித்தாள்.

இன்னும் பத்துப் பதினைந்து நாட்களில் காய்கள் பருவத்துக்கு வந்துவிடும். அந்த மரமும் சதைப் பற்றான காய்களை தரும்உயர்ரக இனத்தைச் சேர்ந்தது தான். பருவத்தில் காய்களைச் சந்தையில் விற்றால் நல்ல வருவாயும் வரும். இத்தனைக்கும் அந்தக் காய்களுக்கு சந்தையில் நல்ல கிராக்கியும் இருந்ததனால் தொண்டை வலிக்கக் கூவியழைத்து வியாபாரம் செய்யத் தேவையுமிருக்கவில்லை.

நிரந்தரமல்லாத கூலிவேலை செய்யும் அந்தோனி பல சமயங்களில் வெறுங்கையோடு வீடு வரும்போதும் கணவனை வைது சண்டை செய்ய மாட்டாள் அன்னம்மா. "எல்லாம் அவன் செயல்" என்று காலுடைந்த முக்காலியில் சுவரோரமாய் தூசு தட்டி, பூ வைக்கப்பட்டிருந்த குழந்தை இயேசுவின் படத்தைப் பார்ப்பாள். "யாமிருக்கப் பயமேன்" என்பதுபோல கரம் விரித்து நிற்கும் அக்குழந்தை இயேசுவிடம் "எனக்கு எல்லாமே நீதானப்பா" என்பாள்.

சில நாள்களாகவே அந்தோனி ஆஸ்துமா நோயினால் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். இயல்பிலேயே மெலிந்த தோற்றம் கொண்டிருந்த அவன் இந்த நோயின் தீவிரத்தால் எலும்பும் தோலுமாகவே ஆகி விட்டிருந்தான். உரிய மருந்துகளையும் உடல் வலுவுக்குத் தேவையான சத்தான உணவுகளையும் வாங்கிக் கொடுக்க மனம் இருந்தாலும் பணம் இல்லை அன்னம்மாவிடம். அந்தளவுக்கு அவளது குடும்பப் பொருளாதாரம் மிகவும் பின்தள்ளிய நிலையிலேயே இருந்தது. இத்தனைக்கும் அன்னம்மா வாளா இருப்பவளுமல்லள், வீண் செலவாளியு மல்ல. வீட்டு வேலை செய்து கொடுத்தல், மா இடித்தல் போன்ற இன்னோரன்ன வேலைகளில் தன்னையும் ஈடுபடுத்தி, தானும் குடும்பப் பாரத்தைச் சுமப்பவள் தான். என்னதான் இருந்தாலும் இவள் கொண்டுவரும் அந்த எண்பது, நூறு ரூபாய்கள் அன்றைய சாப்பாட்டுக்கே போது மானதாக இருக்கவில்லை. விலை வாசி வேறு நாளுக்கு நாள் ஏறிக் கொண்டிருந்தது. இவை போதா தென்று மழை நாட்களில் ஆங்காங்கே ஒழுகத் தொடங்கும் வீடு. கட்டில், மெத்தை என்று இல்லாததால் ஒற்றைப் பாயிலேயே அன்னம்மா வின் பழைய புடைவை யொன்றைப் போர்த்திக் கொண்டு சுருண்டு கிடக்கும் அந்தோனி குளிரினாலும் வெல வெலத்துப் போவான். இந்த நேரத்தில் நோயின் வேகமும் சேர்ந்து கொள்ள கன்னம், கழுத்து, மார்பு, விலா என்று அனைத்துப்பகுதிகளும் உள்ளிழுத்து வெளித்தள்ளப் படுகையில் பார்க்கவே மிகவும் பரிதாபமாக இரக்கும். இவை யெல்லாமே எழுந்தமானமாக நினைவில் வந்து செல்ல அவளையறியாமலேயே கண்கள் பனித்தன அன்னம் மாவுக்கு. தோள்பட்டைகளில் கண்களைத் துடைத்தபடி "என்னதான் செய்யப் போகிறேனோ" என்று கலங்கியவளாய் எதேச்சையாய்த் திரும்பியவளுக்கு வேலியோரமாய் காய்களைச் சொரிந்து நின்ற முருங்கை மரம், தன் கஷ்டங்கள் தீர்க்கப் போகும் கடவுளாகவே தெரிந்தது.

காலை வேளையிலேயே பிராணன் போவதுபோல் தொண்டை கிழியக் கத்தியது அந்த முருங்கை மரத்தில் நின்ற ஓர் காக்கை. கையிலிருந்த சுளகால் காகத்திற்குப் போக்குக்காட்டிவிட்டு முருங்கை மரத்தடிக்குச் சென்றாள் அன்னம்மா. அவள் எதிர்பார்ப்பதற்கும் மேலாக செழிப்பாகவும் பெரிதாகவும் இருந்தன காய்கள். கையோடு கொண்டு வந்திருந்த சுளகை அருகிலிருந்த கல்லின் மேல் வைத்துவிட்டு வேலியில் சாய்க்கப்பட்டிருந்த மெல்லிய தடியை எடுத்தாள். காய்களை ஒவ் வொன்றாய்ப் பத்திரமாய் ஒடித்தாள். நிலத்தில் விழுந்த காய்களை தனது சேலையில் துடைத்து சுளகில் அடுக்கினாள். சுளகு காய்களால் நிரம்பி விடவும் வீட்டினுள் சென்று விரித்து வைத்திருந்த சாக்கில் பரவினாள். இவ்வாறு பறிப்பதும் அடுக்குவதுமாய் பதினாறாவது தடவையே காய்கள் பறிப்பது நிறை வடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்கொள்ளாச் சந்தோஷத்துடன் காய்களை வருடியவள் ஏழேழாக அவற்றைச் சேர்த்து சணலால் கட்டத் தொடங்கினாள். கைகள் வேலை செய்து கொண்டிருந்தாலும் மனம் வேறு எண்ணியது. எப்படியும் ஒரு கட்டு பதினைந்து ரூபாய்க்கு விற்றாலும் அறுநூறு எழுநூறு ரூபாயாவது கிடைக்கும். மருந்துக்கு, சாப்பாட்டுக்கு என்று செலவு செய்தது போகவும் கொஞ்சமாவது மிஞ்சும். இந்த மிகுதியையும் தனக்குக் கிடைக்கும் சிறிதளவு பணத்தையும் வைத்து நாலைந்து நாட்களுக்கு சமாளித்து விடலாம் என்றெல்லாம் திட்டங்கள் போட்டது. இந்த யோசனைகளோடு கைவேலையும் முடிந்திருந்தது. மீந்திருந்த நாலு காய்களையும் அன்றைய சமையலுக்கென்று எடுத்துவைத்துவிட்டு முருங்கைக் காய் கட்டுக்களை மெல்லிய சணல் பையால் சுற்றினாள்.

பாயில் படுத்திருந்தபடி மிக வரட்சியாக இருமிய கணவனை திரும்பிப் பார்த்தாள், "கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்க, இந்த முருங்கைக் காய்களை இப்போதே சந்தைக்குக் கொண்டு போனால்தான் விரைவாக விற்று முடிக்கலாம். வியாபாரம் சூடு பிடிக்கும்" என்றபடி அந்தச் சணல் பையைப் பக்குவமாய்த் தூக்கி தலையில் வைத்தாள். "இதோ வந்துடறேன்" என்று கணவனிடம் கூறியவள் விறுவிறுவென நடக்கத் தொடங்கினாள்.

எத்தனையோ கனவுகளுடனும் கற்பனைகளுடனும் தலையில் கனத்துடனும் அந்தப் பெருந்தெருவில் ஓட்டமும் நடையுமாய் விரைந்தவள், முன்னால் வீதியின் வளைவினூடாக சடுதியாகத் திரும்பிய லொறியைக் காணத் தவறிவிட்டாள். திடீரென வேகமாக வந்த அந்தக்கனரக வாகனத்தைக் கண்ட அன்னம்மா முதலில் தடுமாறி விட்டாலும் நின்று நிதானித்து நிமிர்வதற்கு இடையில் அது நடந்தே விட்டது.

லொறியுடன் மோதிவிடா வண்ணம் பாதையோரச் செடிகளிடையே தன்னை நிலைப்படுத்திக் கொள்ள நினைத்தவளின் எண்ணத்தில் தலையிலிருந்த முருங்கைக் காய் அகப்படவில்லை. தடுமாற்றத்துடன் பாதை ஓரத்தில் அவள் ஒதுங்க கல்தான் காலைத் தடுக்கியதோ, என்னவோ, காய்கள் சுற்றியிருந்த சணல்பை விழவும் காய்கள் சிதறவும் லொறி முன்னேறவும் சரியாக விருந்தது. எல்லாம் ஒரு கணம் தான். ஆசையாசையாய் அவள் கொண்டு வந்த அத்தனை காய்களும் லொறியின் டயர்களில் நசியுண்டு நாசமாயின. முன் டயர் ஏறியது போதாதென்று பின்னாலிருந்த டயரும் காய்களைப் பதம் பார்த்துச் சென்றது. எல்லாம் ஒரு கணம் தான்: ஒரே கணம் தான். ஏறக்குறைய எல்லாக் காய்களுமே நாசமாகி இருந்தன.

நடந்தவற்றை செய்வதறியாது பார்த்துக்கொண்டிருந்த அன்னம்மாவின் தலையில் யாரோ சம்மட்டியால் ஓங்கி அடித்தது போல் இருந்தது. தலை கிறுகிறுக்க, உதடு துடிக்க, கைகால்கள் நடுநடுங்க, துக்கம் தொண்டையை அடைக்க கண்ணுக்கெட்டிய தூரம் வரை எல்லாம் சூனியமாய் தோன்றிற்று.

மூடிய கண்களில் இருந்து முத்து முத்தாய் விழுந்த கண்ணீர் கன்னத்தில் கோலமிட, இமைகளை உயர்த்திய அன்னம்மாவிற்கு, குழந்தை இயேசு ஆலயத்தின் கோபுரச் சிலுவையே கண்ணில் பட்டது. அந்தக் கணம் "சின்ன இயேசுவே! இந்த முருங் கைக்காய்களுக்கு பதிலாக நான் லொறியினுள் அகப்பட்டிருந்தால்...." என்று தோன்றவே மெய்சிலிர்த்தது. அதன்பின் ஏற்படும் விளைவுகளைக்கண் முன்நின்று காட்டுவது போலிருந்தது. "என் கணவன் அனாதையாகி விடுவாரே, யாருடைய கவனிப்புமின்றிதத்தளிப்பாரே, இந்த முருங்கைக் காய்களை விற்றால், இரண்டு நாளோ, மூன்று நாளோ வயிற்றுப் பிழைப்பைப் பார்க்கலாம் ஆனால் நானே அகப்பட்டிருந்தால் மிகுதி நாட்களின் நிலை என்ன" என்பதை யோசிக்கப் பயந்தவளாக, தன்னைக் காத்தது அந்த குழந்தை இயேசு என்பதை உணர்ந்தவளாய் கோமிலை நோக்கி நன்றி செலுத்துவதற்காகச் சென்றுகொண்டிருந்தாள். அப்போது ஒலித்த அந்த ஆலய மணி "நான் உன்னை ஒருபோதும் கைவிடேன், ஒருபோதும் உன்னை விட்டு விலகமாட்டேன்" என்பது போல் ஒலித்துக் கொண்டிருந்தது.

*ஆக்கம் :-*
செல்வி ஆன் சுஜந்தினி பிலிப்ஸ்
உவர்மலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் பக்திச்சபைகள்

## ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

ஒரு பங்குத்தளத்தின் முதுகெலும்பாக இருந்து, அதனை ஓங்கி வளரச் செய்யவும், ஆலமரமாகிக் கிளைபரப்பவும் அதனைத் தாங்கும் விழுது களாகச் சுற்றி நின்று தாங்கவும் பக்திச் சபைகள் இன்றியமையாதனவாகும். இது, பங்குத்தளத்திற்கும் பொருந்தும், கோட்டத்திற்கும் பொருந்தும், ஏன் முழு மறைமாவட்டத்திற்குமே பொருந்தும் எனலாம்.

இந்த ரீதியில் நாமிங்கு மட்டக்களப்பில் காணப்படும் பக்திச்சபைகளை ஆராய்கின்றோம். காலத்திற்குக் காலம் பற்பல சபைகள் இயங்கி வந்திருந்தாலும், அன்றிருந்த பல இன்றில்லை. மொத்தமாகப் பார்க்கப்போனால், புனித வின்சன் டி பவுல் தருமசபை, மரியாயின் சேனை, மாதா சபை, திரு இருதயச் சபை அன்றைய காலகட்டத்தில் காணப்பட்டாலும், இன்று வரை மட்டக்களப்பில் நிலையாக நின்று சேவை புரிவன, புனித வின்சன் டி பவுல் தரும சபை, மரியாயின் சேனை, திரு இருதயச் சபை ஆகியவை மட்டுமே என்றால் அது மிகையாகாது. இவை பற்றி ஆராய்வது சாலவும் சிறந்தது.

புனித வின்சன் டி பவுல் தரும சபையை நாம் எடுத்துக் கொண்டால் 1912ம் வருடத்திற்கு முன்னால் இருந்தே மட்டக்களப்பில் இயங்கி வந்திருப்பது தெரிய வருகிறது. புளியந்தீவு, புளியடிக்குடா, தாண்டவன்வெளி ஆகிய பங்குத்தளங்களில் செயற்பட்டுள்ளது. 1933ம் வருடத்திலே பிராந்திய சபை, அப்போதைய சர்வதேச சபையால் அங்கீகரிக்கப்பட்டது. அப்போதைய சபையானது particular council என அழைக்கப்பட்டது. 1970ம் வருடம் வரை மேற்கண்ட மூன்று பங்குகளில் மட்டுமே புனித வின்சன் டி பவுல் தரும சபை இயங்கியது. அன்றைய கால கட்டத்தில் 'இரத்தல்' தவிர்ந்த எந்த வகையிலும் சபைக்கு நிதி திரட்ட முடியாதென்ற விதிமுறைக்கேற்ப செயற்படத் தொடங்கித் தற்போது வரை இயங்கி வருவதைக் காணமுடிகிறது.

விதவைகட்கும், வயோதிபர்கட்குமான ஆதாரம், வெளிநாட்டு உதவிபெற்று இல்லமற்றவர்க்கு அவற்றை அமைத்துதவுதல், தொழிலுக்கு தவுதல், கல்விக்கான அனுசரனை ஆகியவற்றுடன் ஆன்மீக நிகழ்வுகள்: நோயாளர் ஆசீர்வதிப்பு போன்றவை புனித வின்சன் டி பவுல் தரும சபையால் மேற்கொள்ளப்பட்டு வந்தமையை நாம் நினைத்துப் பார்க்க முடிகிறது.

இருதயபுரப் பங்கு ஆரம்பித்த பின்னர் அங்கும் செயற்படத் தொடங்கியது. இது நான்காவது ஆலோசனைச் சபையானது, 1972ம் வருடத்தில் ஒரு தலைமைத்துவத்தின் கீழ், புதிய பிராந்திய சபை Regionalcouncil என்னும் பெயர் மாற்றத்துடன் செயல்பட்டு 1984ம் வருடத்துக்குள் சர்வதேச ரீதியில் கவனத்தை ஈர்த்துக் கொள்ளுமளவிற்கு விரைவாகப் பங்குகளில் பரவியது.

1995ம் வருடமளவில் வாகரை, மாங்கேணி, வாழைச்சேனை, கோரகல்லிமடு, வந்தாறுமூலை, செங்கலடி, ஆயித்தியமலை, வெலிக்காகண்டி, புல்லு மலை, தன்னாமுனை, இருதயபுரம், மாமாங்கம், கூளாவடி, தாண்டவன்வெளி, புளியந்தீவு, வீச்சுக்கல்முனை, புளியடிக்குடா, நாவற்குடா, தாளங்குடா போன்ற இடங்களில் தருமசபை இயங்கியது. மேலதிகமாக பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இத்தகைய பாடசாலைகளாகப் புனித மிக்கேல் கல்லூரி, புனித சிசிலியா மகளிர் வித்தியாலயம், இந்துக்கல்லூரி, தன்னாமுனை புனித வளனார் வித்தியாலயம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

மட்டக்களப்பிலே புனித வின்சன் டி பவுல் தரும சபையானது, மற்றுமொரு துறையிலும் ஈடுபட்டுள்ளது சிறப்பைத் தருகிறது. மட்டக்களப்பு நகரில் இருந்து ஐந்து கிலோ மீற்றருக்கப்பாலமைந்துள்ள ' சத்துருக்கொண்டான்' என்னுமிடத்தில் 17. 03. 1986 முதல் ஆரம்பிக்கப்பட்ட ஊனமுற்றவர்களுக்குப் புகலிடமான "ஓசானம்" இல்லம் 3 பிள்ளைகளுடன் ஆரம்பமானது. தற்போது நாற்பது பிள்ளைகள் இங்கு தங்கிப் பயனடைகின்றனர். திருக்குடும்பக் கன்னியர்களின் உதவியைக் கொண்டு இந்த இல்லம் நடத்தப்படுகின்றது.

அடுத்ததாக, மரியாயின் சேனையைப் பார்த்தால் இது 1948ம் வருடத்திலே புளியந்தீவு புனித மரியாள் இணைப்பேராலயப் பங்கில் ஆரம்பித்தது. 12 பேருடன் ஆரம்பமான சேனை பின் தாண்ட வன் வெளியில் ஆரம்பமானது. 1968ல் புளியடிக்குடாவில் ஆரம்பமானது. 1971க்குப் பின் பல பங்குகளில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று மறைக்கோட்டத்தில் பல பங்குகளில் இயங்குவதைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆரம்பத்தில் ஆண்கள் பிரசீயடிங்கள் தனியாகவும் பின்னர் பெண்கள் பிரசீடியங்கள் தனியாகவும் இயங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின. காலப்போக்கில் கலவன் பிரசீடியங்கள் உருவாக்கப்பட்டன. தொடர்ந்து வளர்ச்சிப் படிகளாகச் சிறுவர் பிரசீடியங்களும், இளைஞர் பிரசீடியங்களையும் நாம் குறிப்பிடமுடியும். இவை தவிர வயோதிபர் இல்லத்திலும் ஒரு முதியோர் பிரசீடியம் இயங்குகிறது.

மாதா சபை 1960களில் மட்டக்களப்பில் புளியடிக்குடா போன்ற பங்குகளில் சிறப்பாகச் செயற்பட்டது. காலப்போக்கில் இது கிறிஸ்தவ வாழ்வுச் சமூகமாக உருமாறிச் செயற்படத் தொடங்கியது.

திரு இருதயப் பக்திச்சபையானது சில பங்குகளிலேயே காணப்படுகிறது. திரு இருதயநாதரின் பக்தியைப் பரப்புவதை இதன் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. பக்திச் சபையாக இருந்து பக்திமுயற்சிகளில் மக்களை ஈடுபடுத்துவதுடன், மனித உருவாக்கலிலும், ஆன்மீக வழிநடத்துதலிலும், பங்குத் தரிசிப்புக்களிலும் கூடுதலாக முயன்று வருவது சிறப்புத் தருவதாகவுள்ளது.

இவற்றைவிடச் சமூக சேவையை அடிப்படையாகக் கொண்ட பல சபைகள், பங்குகள் தோறும் காணப்பட்டாலும், மேற்கண்டவையே இன்று வரை தொடர்ந்து செயற்பட்டுவருகின்றன. கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம், பூசைப்பரிசாரகர் சபை, திருப்பாலத்துவ சபை போன்றவைகளும் ஆங்காங்கு இயங்கிவருவது எமது நகரையும், மறைக்கோட்டத்தையும் திருச்பைப் பணியில் செழிக்கச் செய்வதாக அமைவதை நாம் ஏற்கத்தான் வேண்டும்.

**- மெற்றில்டா இராஜேந்திரம் -**

## பாலையூற்று புனித லூர்து அன்னையின்...

பின்னர் திருநாள் இறுதி நிகழ்வில் கடந்த 13.07.02 அன்று திருகோணமலை - நிலாவெளி உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. பரத் அடிகளும் பங்கு பீடப்பணியாளர்களும், திருகோணமலை - சீனன்குடா பங்குத்தந்தை அருட்பணி. பிரசன்னா அடிகளும் பங்கு பீடப்பணி யாளர்களும் பாலையூற்று பீடப்பணியாளர் சபையின் விசேட அழைப்பின் பேரில் வருகை தந்தனர்.

பின் எமது பங்குப் பீடப்பணியாளர் சபையின் ஏற்பாட்டில் மூன்று பங்கு பீட்பணியாளர்களுக்கும் கிரிக்கெட்போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் திருகோணமலை -நிலாவெளி பங்கு பீடப்பணி யாளர்கள் வெற்றியைப் பெற்றனர்.

இதன் பின்னர் பாலையூற்று, அன்புவழிபுரம் பங்கு பீடப்பணியாளர்கள் இணைந்துஏற்பாடு செய்திருந்த மதிய போசன விருந்து நடைபெற்றது. இந்தப் போசனத்தில் மூன்று பங்குத்தந்தையர்களும் பீடப்பணியாளர்களும் ஒன்றாக இருந்து சந்தோசமாக உணவருந்தியது இந்த சமாதான சூழலில் விசேட நிகழ்வுகளில் ஒன்று எனக்கருதலாம். இந்த நிகழ்வுடன் எமது பங்கு பீடப்பணியாளர் சபையின் இவ்வருட திருநாள் சிறப்பு நிகழ்வுகள் யாவும் நிறைவடைந்தன.

இவர்கள் மென்மேலும் சிறப்பாக வளர்ந்து வர வாழ்த்துவோம்!

**- பாலையூற்று பங்கு மகன்**

## கௌரவ 'இலக்கிய முதுமானி'

### மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள்



சிறுவர்கதை உலகின் தனக்கு நிகர் இல்லாது தலைசிறந்து விளங்கும் அற்புதக் கலைஞரான மாஸ்ட்டர் சிவலிங்கம் அவர்களுக்கு கிழக்குப் பல்கலைக்கழகம் கடந்த பத்தாம் திகதி (10.10.2002) நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது 'கௌரவ இலக்கிய முதுமானி பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, மேடைகள், பாடசாலைகள், சமூகநல நிறுவனங்கள் என்று பலவற்றிலும் சிறுவர், சிறுமியருக்கு அறிவூட்டும் நகைச்சுவைக் கதைகள் மூலம் சிறுவர்களின் வாழ்வு சிறக்க அரும்பணி புரிந்துவரும் மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள் இலக்கியச் சொற்பொழிவாளரும் கூட. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல்வேறு பட்டங்களையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ள அவருக்குக் கிழக்குப் பல்கலைக்கழகம் வழங்கும் கௌரவ இலக்கிய முதுமானி பட்டம் பொருத்தமானதே. புகழ்பூத்த நம் கலைஞருக்குக் கிடைக்கும் மதிப்பார்ந்த கௌரவத்துக்காக அவரை நாமும் மகிழ்வோடு **வாழ்த்துகிறோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைகளோடு ஏழையாக

சி.லோகன்
C.Y.A
கல்லாறு,

கிறிஸ்துவினது வாழ்வில் முக்கியம் பெறுபவர்கள் ஏழைகளே. அவரது வாழ்விலும் பணியிலும் இந்த ஏழைகளே மையம் கொண்டிருந்தனர். இதனால் தான் கிறிஸ்துவினது வாழ்வும் ஓர் ஏழையின் வாழ்வாக அமைந்திருந்தது.இவ்வாறாக கிறிஸ்துவினது வாழ்வில் ஏழைகள் பெறும் முக்கியத்துவத்தை அவரது வாழ்க்கை வழியாகவும், அவரது போதனைகள், உவமைகள், புதுமைகள் வழியாகவும் நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

கிறிஸ்துவினது பிறப்பைப் பற்றி விரிவான விளக்கமளிக்கின்ற நற்செய்தியாளர் லுக்கா, சந்தேகமின்றி கிறிஸ்துவை ஏழ்மையின் வடிவாகவே சித்தரித்துக் காட்டுகின்றார். கிறிஸ்துவை ஏழையாகவும் அவர் பிறந்த இடம், சூழல் என்பன ஏழ்மையை வெளிப் படுத்தியதாகவும் கூறுகின்றார். உதாரணமாக கிறிஸ்து பிறந்த போது துணிகளில் பொதிந்து தீவனத்தொட்டியில் கிடத்தப்பட்டார். (லூாக் 2: 7). முதன் முதலில் இயேசுக் கிறிஸ்துவைக் கண்டு வணங்கியவர்கள் ஏழைகளான இடையர்களே. (லூாக் 2: 8-20) எருசலேம் ஆலயத்தில் கிறிஸ்துவைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தபோது அவரது பெற்றோர் ஏழைகளுக்குரிய மாடப்புறாவையே காணிக்கையாகக் கொடுத்தனர். (லூாக் 2: 24) . அடுத்து நற்செய்தியாளர் மாற்கு கிறிஸ்து தச்சுத் தொழிலில் ஈடுபட்டதாகக் கூறுகின்றார்.(மாற் 6:3)மேலும் கிறிஸ்து ஏழைகளோடு உணவருந்துகின்றார். (லூாக் 14: 12) இறுதியாக கிறிஸ்து இரவல் கல்லறை ஒன்றிலேயே அடக்கம் பண்ணப்படுகின்றார். (லூாக் 23: 50-55). இவ்வாறாக கிறிஸ்து ஏழையாகவே பிறந்து, ஏழையாகவே வாழ்ந்து, ஏழையாகவே அடக்கம் செய்யப்பட்டார்.

அடுத்து, கிறிஸ்து தமது போதனைகளிலும் ஏழைகளுக்கு முக்கிய இடம் கொடுப்பதைக் காண்கின்றோம். கிறிஸ்து தமது போதனையை ஏழைகளுக்கு விடுதலை அளிக்கும் அருள்தரும் ஆண்டில், ஏழைகள் சார்பாகவே தொடங்குகின்றார். " ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்." (லூாக் 4: 19) அடுத்ததாக கிறிஸ்து தமது மலைபொழிவினூடாக "ஏழைகளே நீங்கள் பெறுபெற்றவர்கள்" என ஏழைகளுக்கு ஆசி வழங்குகின்றார். உதாரணமாக "ஏழைகளே நீங்கள் பேறு பெற்றவர்கள்--------", "பட்டினியாய் இருப்பவர்களே நீங்கள் பேறுபெற்றவர்கள்-----", அழுது கொண்டிருப்பவரே நீங்கள் பெறு பெற்றவர்கள்------", இவ்வாறாகக் கிறிஸ்து ஏழைகள் சார்பாக வெளிப்படையாகவே பேசுகின்றார். இதை விட மேலாக தமது சீடராய் இருப்பதற்கு அடிப்படைத்தகுதி "ஏழ்மையே" என வலியுறுத்துகின்றார். "தம் உடைமைகளையெல்லாம் விட்டு விடாத எவரும் என் சீடர்களாய் இருக்க முடியாது." (லூாக் 14: 33) இவ்வாறாகக் கிறிஸ்துவினது போதனையின் மையமாக விளங்குபவர்கள் ஏழைகளே.

அடுத்து கிறிஸ்துவால் கூறப்பட்டதாக நற்செய்தியில் கூறப்படும் 40 உவமைகளில் கணிசமானவை (12) ஏழைகள் சார்பாகவே கூறப்பட்டுள்ளன. இவ் உவமைகளின் ஊடாக கிறிஸ்து அன்றைய யூத மக்களின் சமுகப் பின்னணியை அடிப்படையாக வைத்துச் செல்வதை, "உடையவர்கள் அதை ஏழைகளோடு பகிர்ந்து கொள்ள வேண்டும், இறையரசை அடைய ஏழையாகவே வாழ வேண்டும்" எனக்கூறி ஏழைகளுக்கு ஆறுதலும் நம்பிக்கையும் அளிக்கின்றார். உதாரணமாக "செல்வரும் இலாசரும் " எனும் உவமையில் செல்வந்தன் பெரும் தொகையான செல்வத்தை பகிராததால் அவனுக்கு ஏற்பட்ட பரிதாபமான முடிவை எடுத்துக் கூறி, பகிர்ந்து வாழ்வதற்கும் முடிவில்லாப் பேரின்ப வாழ்விற்கும் இடையே உள்ள தொடர்பை விளக்குகின்றார். அடுத்து செல்வந்தர் எத்தகைய இரக்கமுடையவராய் இருக்க வேண்டும், அவர்கள் எவ்வாறு ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்பதை "நல்ல சமாரியன்" எனும் உவமை முலம் விளக்குகின்றார்.

அடுத்து கிறிஸ்துவினால் செய்யப்பட்ட புதுமைகளிலும் ஏழைகள் முக்கியம் பெறுவதைக் காண்கின்றோம். கிறிஸ்து தாம் செய்த புதுமைகளில் அதிகமானவற்றை ஏழைகள் சார்பாகவே செய்தார். உதாரணமாக நயீன் ஊர்க் கைம் பெண்ணின் மகனை உயிர்ப்பிக்கின்றார். (லூாக் 7: 11- 13) உடல் ஊனமுற்ற ஏழைப்பெண்ணை குணப்படுத்துகின்றார். (லூாக் 13: 10- 17) பத்து தொழுநோயாளர்களைக் குணப்படுத்துகின்றார் (லூாக் 17: 11- 19).

இவ்வாறு தமது சொல்லாலும், செயலாலும், வாழ்வாலும் ஏழ்மையின் வடிவாகத் திகழ்ந்த கிறிஸ்து செல்வத்தை வெறுத்தாரா எனக் கேட்டால், கிறிஸ்து செல்வத்தை வெறுக்கவில்லை. மாறாக பண ஆசையை, அதனால் எழுகின்ற ஆணவத்தை, கர்வத்தை, பணத்திமிரை வன்மையாகக் கண்டிக்கிறார். நாம் செல்வத்தின் மேல் மிதமிஞ்சிய பற்று வைத்தால் அது எம்மை இறைவனிடம் அழைத்துச் செல்லாது என்பதற்காகவே கிறிஸ்து செல்வத்தை கடுமையாக விமர்சிக்கின்றார். பணத்தின் மேல் எமக்கு அளவுகடந்த ஆசையிருந்தால் பணமே கடவுளாக மாறும். எனவே தான் கிறிஸ்து செல்வத்தை விடுத்து ஏழ்மையை விரும்பி ஏற்றுக் கொண்டு எம்மிடம் உள்ளதை ஏழைகளுடன் பகிர்ந்து வாழ அழைக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுப்போட்டி !

**பிள்ளைகளுக்கு மட்டும்**

**முடிவுத்திகதி :– 30.10.2002**

**விவிலியம் கற்போம் - 20**

# யாக்கோபு குடும்பத்துடன் எகிப்துக்குச் செல்லுதல்

(தொடக்க நூல் 46:1 - 34)

**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக**

யாக்கோபு புத்துயிர் பெற்றவராக .......................... சென்றடைந்து, அவ்விடத்தில் கடவுளுக்குப் பலிகளை ஒப்புக்கொடுத்தார். அன்றிரவு கடவுள் அவருக்குக் காட்சியளித்து, "எகிப்திற்குச் செல்ல நீ அஞ்சவேண்டாம். அங்கே உன்னைப் பெரிய இனமாக .......................... செய்வேன். நானும் உன்னோடு ................. வருவேன். யோசேப்பு ........................ உன் கண்களை மூடுவான்" என்றார். யாக்கோபு பெயேர்செபாவை விட்டுப் புறப்பட்டார். அவருடைய புதல்வர்கள் தமது பிள்ளைகளையும் மனைவியரையும் அவருக்கு ................................ அனுப்பியிருந்த வண்டிகளில் ஏற்றிக் கொண்டனர். ................................ நாட்டில் அவர்கள் சேர்த்திருந்த ஆடு, மாடுகளையும் .............................. சேகரித்துக் கொண்டனர். இவ்வாறு யாக்கோபு தம்வழி மரபினர் அனைவரோடும் எகிப்துக்குப் போனார். கோசேன் பகுதியில் ........................ தம்மை வந்து சந்திக்குமாறு யூதாவை தமக்கு முன் அனுப்பியிருந்தார். அதன்படி யோசேப்பு தமது தேரைப் பூட்டிக்கொண்டு தந்தையைச் சந்திக்கச் சென்றார். அவரைக் கண்டவுடன் அவர் தோளில் சாய்ந்து கொண்டு ................................ அழுதார். அப்போது யாக்போபு, "இப்பொழுது நான் சாகத்தயார். நீ உயிரோடுதான் இருக்கிறாய்! உன் முகத்தைக் ................................ கண்டுவிட்டேன்! என்றார். பின்னர் யோசேப்பு, "நான் பார்வோனிடம் போய், கானான் நாட்டிலிருந்து என் சகோதரரும் தற்போதைய குடும்பத்தாரும் என்னிடம் வந்திருக்கிறார்கள் என்று அவருக்குத் தெரிவிப்பேன், பார்வோன் உங்களை அழைத்து, "உங்கள் தொழில் என்ன? என்று கேட்கும்போது நீங்கள் மறுமொழியாக, "எங்கள் சிறுவயது முதல் இந்நாள்வரை மேய்ப்பர்களாக இருக்கிறோம்" என்று சொல்லுங்கள். நீங்கள் கோசேன் பகுதியில் குடியிருக்கும்படி அனுமதிக்கப்படுவீர்கள்" என்றார்.

**விடைகள் :–** எகிப்திற்கு / கண்ணாரக் / பெயோர்செபாவை / வளரச் / யோசேப்பு / வெகுநேரம் / தன்கையாலே / பார்வோன் / கானான் / சொத்துக்களையும்

முகவரி : விவிலியம் கற்போம் / அறிவை வளப்போம் - 20

தொண்டன் அ. பெ. எண் - 44,

மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு மட்டும்
முடிவுத்திகதி 30. 10. 2002

# பரிசுப்போட்டி

## அறிவை வளர்ப்போம் – 20

(பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து அடிக்கோடிடுக)

01. பஞ்சபாண்டவரில் காற்றின் மகன் என்று அழைக்கப்படுபவன்
( அருச்சுனன் , வீமன் , தருமன் )

02. முன்பு பபிலோனியா என்று அழைக்கப்பட்ட நாடு இன்று இவ்வாறு அழைக்கப்படுகிறது.
( ஈரான் , ஈராக் , எகிப்து )

03. தீராத விளையாட்டுப் பிள்ளை . . . என்ற பாடலை இயற்றியவர்
(பாரதியார் , சோமசுந்தரப பாரதியார் , சுத்தானந்த பாரதியார் )

04. சீகிரிய சித்திரங்களை வரைந்தவன்
( துட்டகைமுனு , காசியப்பன் , பராக்கிரமபாகு )

05. கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்திருக்கும் இலங்கை வீரர்.
( மாவன் அத்தப்பத்து , சனத் ஜெயசூரிய , அரவிந்த டி சில்வா )

06. தொண்டன் சஞ்சிகை ஜூலை - ஆகஸ்ட் சிறப்பு மலரில் "பூர்வீக மட்டக்களப்பு பிரதேசம்" என்னும் கட்டுரையை வரைந்தவர்
( க. தங்கேஸ்வரி , ஆழியோன் , எஸ். எதிர்மன்னசிங்கம் )

பெயர் : ..........................................................................

முகவரி : ..........................................................................

..........................................................................

(வினாப் படிவத்திலேயே விடைகளை அனுப்புதல் வேண்டும்.
வேறாக எழுதப்படும் விடைகள் போட்டிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலியம் கற்போம் 18 விடைகள்

பெயர் செபாவை, வளரச், எகிப்திற்கு, தன்கையாலே, பார்வோன், சொத்துக்களையும், யோசேப்பு, வெகுநேரம், கண்ணாரக்

## அறிவை வளர்ப்போம் 18 விடைகள்

1) 10 2) சிபிச்சக்கரவர்த்தி 3) லங்கா சமசமாஜிக் கட்சி 4) வாலி 5) வட்மோர் 6) சோழநாடு

**100/- பரிசு பெறுவோர்**

F.A. நிர்மலராஜ்
01, எல்லை வீதி – தெற்கு
மட்டக்களப்பு.

M.P. புவிராஜ்
384/14, பார்வீதி,
மட்டக்களப்பு.

**50/- பரிசு பெறுவோர்**

டிலானி கிருபைராஜா
38, இரத்தினம் வீதி,
கருவப்பங்கேணி,
மட்டக்களப்பு.

பிரகாஷ் பிரதீப்காந்த்
4, புனித செபஸ்தியார் வீதி,
மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறுவோர்**

J.R. பிரியா
72, புனித செபஸ்தியார் வீதி,
புளியடிக்குடா, மட்டக்களப்பு.

F. யூட் திலீபன்,
84/7B, 9ம் குறுக்கு,
இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு.

# நினைவஞ்சலி

**16வது ஆண்டு**



**திரு. S.S. அந்தோனிப்பிள்ளை**
மண்ணில் – 14-09-1919
விண்ணில் – 25-01-1986

அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது
அழியாததாய் உயிர் பெற்றெழுகிறது.
1கொரி 15/42

**6வது ஆண்டு**



**திருமதி. I. அந்தோனிப்பிள்ளை**
மண்ணில் – 08-04-1920
விண்ணில் – 15-08-1996

நிறை வாழ்வுகாண இறை அருளை இறைஞ்சும்.

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுச் சங்கமம்

**வெரித்தாஸ் வானொலி தமிழ்பணிக் குழுவினர் இலங்கை நேயர்களுடன் சந்திப்பு**

**மட்டக்களப்பில்**

**2002 ஒக்டோபர் 20 ஞாயிற்றுக்கிழமை**
**காலை 9.30 மணி**
**மட்/சாள்ஸ் மண்டபம்**

**திருகோணமலையில்**

**2002 ஒக்டோபர் 22 செவ்வாய்க்கிழமை**
**மாலை 3.30மணி**
**புனித மரியாள் தேசிய கல்லூரி அரங்கம்**

**இனிய இதயங்களே!**

வானலை வழியாய் ஈழத் தமிழ் மக்களின் இதயங்கவர்ந்த வெரித்தாஸ் தமிழ் பணிக் குழுவினர் நேயர்களை நேரில் சந்தித்து உறவாடும் ஒன்று கூடல்.

- அருள் பணி A. சிங்கராயன் (தமிழ்ப்பணிப் பொறுப்பாளர்)
- அதிவண பியற்றோ குயன் வான்ரை (நிகழ்ச்சிப் பணிப்பாளர்)
- அருள் பணி A.P. பெனடிக்ற் (இயக்குனர், சாந்தோம் கலைத் தொடர்பு நிலையம், சென்னை)

வருகைதரும் வெரித்தாஸ் தமிழ்ப்பணிக் குழுவினர் உங்களை வாஞ்சையுடன் அழைக்கிறார்கள்.

இன்னும், அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வென்றோருக்கான பரிசளிப்பு, மற்றும் கலைநிகழ்ச்சிகள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

இனிய இதயங்கள் இன்பத்திருவிழாவில் கலந்து மகிழ அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

**நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு:** சமூகத்தொடர்பு நிலையம், அ.பெ.எண் - 44 மட்டக்களப்பு.

St. Ignatius Type Setting - 28, Sinnalebbe Street, Batticaloa.
Printing & Cover Designing - ST. JOSEPH'S CATHOLIC PRESS, BATTICALOA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org